15 FEB 1971

# சிவனொளிபாதமலையில் தீ!

Registered as a News Paper in Ceylon  விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 13
இதழ் 5
தேசிய தினசரி

யாழ்ப்பாணம்  மாசி 3  ஜுல்ஹஜ் 18  திங்கட்கிழமை  (15-2-71)

கொழும்பு, ஞாயிறு இலங்கையர்களின் புனித ஸ்தலமான சிவனொளிபாத மலையில் இன்று திடீரெனத் தீ பற்றிக்கொண்டது. அடர்ந்த காடுகளின் மலையின் உச்சியில் இந்தத் தீ பற்றிக்கொண்டது படிப்படியாக இது சகல பகுதிகளுக்கும் பரவத் தொடங்கியது.

சிவனொளிபாத மலைக்கு யாத்திரிகர்கள் தரிசிக்க செல்லும் காலம் இதுதான நூற்றுக்கணக்கான யாத்திரிகர்களைத் திடீரெனப் பற்றிக்கொண்ட இத்தீ பெருத்த பரபரப்புக்குள்ளாக்கியதுடன் அல்லோலகல்லோலப் படுத்திவிட்டது.

தீப்பற்றிய செய்தி அறிந்ததும் இலங்கை விமானப் படை தீயணைப்பு வேலைகளில் ஈடுபட்டது. தீ வேகமாக நகரின் சில பகுதிகளுக்கும் பரவத் தொடங்கியது. ஆனாலும் விமானப் படையினர் தீயைப் பரவவிடாது அணைத்துவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. வான்ஸன்டைன் ஹெலிக்கோப்டரில் சென்று பார்வையிட்டார்.

உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய விதத்தில் பெரும் தீ விபத்தாக இது இருந்ததாகக் கூறப்படுகிறது.

## ஆட்சிமன்றத்தில்

# சமூகக் குறைபாடு ஒழிப்பு சட்டத் திருத்த மசோதா!

## பொலிசுக்கு கூடிய அதிகாரம்

**ஆலயத்துக்குள் செல்லவிடாது வேலியோ அல்லது தடையோ போட்டால் அதனை அகற்றுவதற்குப் பொலிஸாருக்கு அதிகாரம்;**

**எந்த ஒரு நிறுவனமும் சட்டத்திற்குப் புறம்பாக நடந்துகொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு அந்த நிறுவன நிர்வாகி குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் அந்த நிறுவனத்தின் லைசென்ஸ் ரத்தாகும்.**

**கிணற்று நீரை அசுத்தப்படுத்தினாலும் அல்லது நீர் எடுப்பதை தடுத்தாலும் கடும் நடவடிக்கை.**

**இவ்விதமான குற்றங்களைச் செய்பவர்களுக்கு மூன்று வருடக் கடூழியச் சிறையும், 3 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.**

பொலிஸாருக்கு கூடிய அதிகாரத்தை வழங்கக் கூடிய விதத்தில்மேற்கண்ட அம்சங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சமூக குறைபாடு ஒழிப்புச் சட்ட திருத்த மசோதா நேற்று ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது!

உதவி நீதி அமைச்சர் இந்த திருத்த நகல் மசோதாவைச் சமர்ப்பித்தார்.

சமூக குறைபாடு ஒழிப்புச் சட்டத்தின்படி இப்படியான குற்றங்கள் செய்வோருக்கு ஆகக்கூடியது 3 மாதக் கடூழியச் சிறைத் தண்டனையும், 100 ரூபாய் அபராதமுமே விதிக்கலாம் ஆனால் இந்தத்திருத்த மசோதா மூலம் மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனையும் 3 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்க கோட்டு அதிகாரம் வழங்க வகை செய்கிறது.

இப்படியான குற்றங்கள் செய்வதற்கு ஆயத்தங்கள் செய்யப்படுவதாக அறிந்தால் சம்பந்தப்பட்டவர்களை முன் கூட்டியே 'வாரண்ட்' உத்தரவின்றி கைது செய்வதற்குப் பொலிஸாருக்கு இச்சட்டமூலம் அதிகாரம் வழங்குகிறது.

சட்டத்துக்குப் புறம்பாக நடக்கும் எந்த ஒரு நிறுவன நிர்வாகியும் குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் அந்த நிறுவனத்தின் லைசென்ஸ் ரத்து செய்ய கோட்டுக்கு அதிகாரம் வழங்கப்படுவதுடன் குற்றவாளியாகக் காணப்பட்டால் அவர்

(8-ம் பக்கம் பார்க்க)

## 'சோ' வின் 'துக்ளக்' பத்திரிகை பறிமுதல்!

சென்னை, பெப். 14 நகைச்சுவை நடிகர் 'சோ' வெளியிட்டுவரும் 'துக்ளக்' என்ற மாத பத்திரிகையின் கடைசி வெளியீடுகளை தமிழ் நாடு அரசு பறிமுதல் செய்திருக்கிறது.

அரசியல் வாதிகளையும், பொதுச் சம்பவங்களையும் 'கிண்டல்' செய்யும் கட்டுரைகள், கார்ட்டூன்கள் போன்றவற்றைத் தாங்கி வரும் துக்ளக் பத்திரிகைக்கு நகைச்சுவை நடிகர் 'சோ' ஆசிரியராக இருந்து வருகிறார்.

சென்ற மாதம் ஈ.வே ராமசாமி பெரியார் தலைமையில் நடைபெற்ற திராவிடக் கழக ஊர்வலம் ஒன்றின்போது கடவுளையும், கடவுள் நம்பிக்கையையும் அவதூறு செய்யும் அட்டைகளும் படங்களும் எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாகவும், இவைகள் பற்றியபடங்கள் 'துக்ளக்' பத்திரிகையின் கடைசிப் பிரதிகளில் பிரசுரிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிகிறது இந்தப் படங்களும் செய்திகளும் வெளியிடப் படுவதின் காரணமாக மக்கள் மத்தியில் வேற்றுமையும் பகைமையும் வளரவே வழியேற்படும் என்று கூறி அவை பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றன.

இந்திய மன்னர்களின் மான்யங்களை ஒழிப்பதற்கான உத்தரவில் ஜனாதிபதி கிரி ரஷ்யாவிலிருந்து கைச்சாத்திட்டதை 'துக்ளக்' பத்திரிகை முன்பு மிக சுவாரஷ்யமாகக் கிண்டல் செய்திருக்கின்றது.

கிரி மாஸ்கோவிலிருக்கிறார். இந்திரா காந்தி புது டில்லியிலிருந்து அவரை டெலிபோனில் கூப்பிடுகிறார்.

இந்திரா: ஹலோ மிஸ்டர் கிரி!

ஜனாதிபதி இல்லை, என் பேரு சரி!

இந்திரா எதைச்சொன்னாலும் இடு. கிரி கையெழுத்துப்போடத் தயாராயிருப்பதாக அந்தக் கார்ட்டூனில் சித்தரிக்கப்பட்டிருந்தது.

முக்கிய அறிவித்தல்
யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி
224-ம் இலக்கத்திலுள்ள
ராணி ஆபரண மாளிகை
என்னும் ஸ்தாபனத்தை
1-2-71 தொடக்கம் யாழ்ப்பாணம்
கன்னாதிட்டி வீதியிலுள்ள 63, 64-ம் இலக்க
ஏ. கே. எஸ். அன் சன்ஸ்
(A. K. S & Sons)
என்ற விலாசத்திற்கு மாற்றியிருக்கின்றோம் என்பதை
எமது வாடிக்கையாளர்களுக்கும்,
ஆதரவாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்ளுகின்றோம்.
உரிமையாளர்
ராணி ஆபரண மாளிகை

## லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் தூங்குகின்றன

### வைத்திய நிபுணர் இல்லாததே காரணமாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் உடற்கூறு வைத்தியப் பிரிவு கடந்த சில மாதங்களாக மந்த நிலையில் இயங்கி வருவதாகப் புகார் கூறப்படுகிறது. இங்கு கடமையாற்றிய உடற்கூறு சிகிச்சை நிபுணரை இடமாற்றம் செய்த சுகாதார இலாகா அவருக்குப் பதிலாக வேறு ஒரு டாக்டரையும் இங்கு நியமிக்காததே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய உடற்கூறு வைத்திய நிபுணர் டாக்டர் ஜெயசூரியா இவ்வாண்டு ஆரம்பத்தில் பதவி உயர்வுபெற்று இரத்தினபுரி ஆஸ்பத்திரி வைத்திய சுபரின்டனாகவும், இரத்தினபுரி மாவட்ட சுகாதார பதில் அத்தியட்சகராகவும் நியமிக்கப்பட்டார். அவருக்குப்பதிலாக இப்பகுதிக்கு இதுவரை வேறு டாக்டர் எவரும் நியமிக்கப்படவில்லை.

லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் இப்பிரிவில் இருந்தபோதிலும் அவற்றைத் தகுந்த முறையில் உபயோகிக்க முடியாத நிலையில் இச்சிகிச்சைநிலையம் இருந்துவருகிறதாம்.

இப்பகுதியில் கடமையாற்றவரும் வைத்திய நிபு

(8-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

சிவாஜி ஏடு "ரசிகன்" விற்பனையாகிறது. வருடச் சந்தா ரூபா 5/-. அனுப்புகிறவர்களுக்கு சிவாஜி பிறந்தநாள் மலரும், சிவாஜி கலண்டரும் அனுப்பப்படும். M. மரியசவரி, 18/92, மஜித் பிளேஸ், வெள்ளம்பிட்டி. 2829

நல்லூரில் எட்டு அறைகளுள்ள புதிய வீடும் மூன்று பரப்புக்காணியும் முப்பத்தையாயிரம். கடனுமுண்டு. ஒன்பது பரப்புக்காணி முழுவதும் இருபத்தேழாயிரம், துண்டுகளாகவும் வாங்கலாம். உரிமையாளரின் விலாசம்: 92, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. 2817

டிஸ்பென்சிங் கவுண்டர் சோகேஸ், கண்ணாடி அலுமாரிகள், மேசை, கதிரைகள் இன்னும் அனேக சாமான்களுமுண்டு. விலாசம்: 8, மணிக்கூடு வீதி, யாழ்ப்பாணம். 2822

### தேவை

கைத்தறி நெசவில் நன்கு அனுபவமுள்ள ஆசிரியர் ஒருவரும் நெசவாளர்களும் தேவை விண்ணப்பிக்கவும் விளம்பர இலக்கம் 2828, C/o "ஈழநாடு", யாழ்ப்பாணம். 2828

### நன்றி நவிலல்

29-ந் திகதி (11-2-71) வியாழக்கிழமை இரவு எமது இல்லத்தில் நடைபெற்ற திருமண வைபவத்துக்கு தனிப்பட்ட அழைப்பு இல்லாதபோதும் இன்முகத்தோடு வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தும் பரிசில் தந்தும் மணமக்களையும் எம்மையும் மகிழ்வித்த அனைவருக்கும் எங்கள் உளங்கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம், க. சிவபாதசுந்தரக் குருக்களும் பாரியாரும், மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை. 2831

### விற்பனைக்கு

லொறி:

24 ஸ்ரீ 289 ஒஸ்ரின் டீசல் லொறி விற்பனைக்கு உண்டு M.S பொன்னம்பலம், இல 8 சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். என்ற விலாசத்தில் பார்வையிடலாம். 2832

### 'ஒற்றுமைக்கு வழி'

உடுப்பிட்டி, ஞாயிறு கரணவாய் கூட்டு முன்னணி வாலிபர்களின் விசேஷ பொதுக்கூட்டம் டாக்டர் எஸ் எஸ் மாசிலாமணி தலைமையில் நடைபெற்றது. வேலையில்லாத்திண்டாட்டம் விலைவாசி உயர்வு முதலிய பிரச்னைகள் தீர்ந்துபோனால் நாட்டில் ஒற்றுமையேற்பட வழி கிடைக்கும் எனத் தலைவர் தமது பேச்சில் குறிப்பிட்டார்

# மின்னொளியில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், திங்கள் வடமாகாணத்தில் முதன் முறையாக 'மின்னொளியில்' உதைபந்தாட்டப் போட்டி நடைபெறவிருக்கின்றது. இவ் உதைபந்தாட்டப் போட்டியை, தெல்லிப்பழை 'சூட்டிங் ஸ்ரார்' விளையாட்டுக் கழகத்தினர் நடாத்தவிருக்கின்றனர்.

இந்த உதைபந்தாட்டப் போட்டி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 17-ம் திகதி நடைபெறவிருக்கின்றது.

முதல் போட்டி 6-30 க்கு யூனியன் கல்லூரி பழைய மாணவர் கோஷ்டிக்கும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர் கோஷ்டிக்குமிடையில் நடைபெறும் 2-வது போட்டி இரவு 8-00 மணிக்கு யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் கோஷ்டிக்கும், மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் கோஷ்டிக்குமிடையில் நடைபெறும். (தே. நி)

## இடமாற்றம்

பச்சிலைப்பள்ளி, ஞாயிறு கலவெலமுஸ்லிம் மகாவித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. ம மரியதாஸ் அனுராதபுரம்விவேகானந்த மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய திரு. பி சங்கரப்பிள்ளை ஆகியோர் இம்மாதம் தொடக்கம் யா/உடுத்துறை மகா வித்தியாலயத்திற்கு உதவி ஆசிரியர்களாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

......

## சிரமதானம்

பூநகரி, ஞாயிறு பொன்னாவெளி, சைவப்பிரகாச வித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர்சங்கச் செயற்குழுவினர் மேற்படி பாடசாலை வளவு வேலியைச் சிரமதானமூலம் அடைத்துள்ளனர்.

0 0 0

யாழ்ப்பாணம், திங்கள் இணுவில் அரசோலை கற்பக விநாயகர் ஆலயத்தின் தீர்த்தக்கிணறு இணுவில் உபதபாற் கந்தோர் அதிபர் திரு. க நடராசா தலைமையில் அப்பகுதிப் பொதுமக்களால் சிரமதானம் மூலம் துப்புரவாக்கப்பட்டுத் திருத்தியமைக்கப்பட்டது.

......

## திருவுருவப்படத் திறப்புவிழா

வட்டுக்கோட்டை, திங்கள் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை மண்டபத்தில் அமரர் திரு மு சி இராசரத்தினம் நியாய துரந்தரரின் திருவுருவப்படம் இன்றுமாலை திறந்து வைக்கப்படவிருக்கிறது.

இப்பகுதியில் திருஞானசம்பந்த வித்தியாசாலையையும் மற்றும் பல பாடசாலைகளையும் நிறுவுவதற்கு திரு. இராசரத்தினம் காரணகர்த்தாவாக இருந்தவர்.

......

## தேயிலை

கோட்டை, ஞாயிறு கடந்த திங்கட்கிழமை சோவியத் யூனியன் சுமார் 3,00,000 தொன் தேயிலையை கூடிய விலை கொடுத்து வாங்கியது. அன்று கொழும்பில் நடைபெற்ற தேயிலை ஏலவிற்பனையில் தான் மேற்படி தொகையை சோவியத் யூனியன் கொள்முதல் செய்தது.

......

## 95-வது ஆண்டு விழா

நெடுந்தீவு, திங்கள் நெடுந்தீவு நடுக்குறிச்சி றோமன் கத்தோலிக்க ஆண்கள் வித்தியாலயத்தின் 95-வது ஆண்டுவிழா இன்றும் நாளையும் நடைபெறவிருக்கிறது. இவ்விழாவை யாழ். மேற்றிராசனத் துணை ஆயர் வண. எல். ஆர். அன்ரனி ஆண்டகை ஆரம்பித்துவைப்பார்.

—

## பண்டிதர் இரத்தினேச்வர ஐயா

பண்டிதர் பிரம்மஸ்ரீ இரத்தினேச்வர ஐயா அவர்கள் வயோதிபராகி நோய்வாய்ப்பட்டு அனாதையாகியுள்ளதை முன்னிட்டு அவருக்கு உதவி செய்ய வேண்டுமென்று பண்டிதமணி அவர்கள் இந்துசாதனம் மூலம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க சிலர் நன்கொடை அளித்துள்ளதாகத் தெரிகிறது. சைவத்துக்கும் தமிழுக்கும் கடல் கடந்தும் தொண்டு செய்துள்ள புலவர் சிகாமணிக்கு இச்சமயம் உதவி செய்வது அவருக்குப் பெரும் ஆறுதலாக இருக்கும். 88 வயதான சைவத்தொண்டர் இரத்தினேச்வர ஐயருக்குச் செய்யும் உதவி சிவபெருமானுக்குப் பிரீதியாக இருக்கும். நன்கொடை அளிக்கவிரும்புவோர் முகாமையாளர், ஈழநாடு' யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

துரைசிங்கம் மறைவு

## ஆசிரிய உலகிற்கு பேரிழப்பு



உண்மை, நேர்மை, கண்ணியம், கடமை, அன்பு பண்பு நிறைந்த உத்தம நண்பர் இ துரைசிங்கம் ஆசிரியர் அமரர் ஆகிய முப்பத்தோராவது தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

வசாவிளான் றோ.க. பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிய திரு இ துரைசிங்கம் வட இலங்கைத் தமிழாசிரிய சங்கத்தின் கௌரவ தனாதிகாரியாக இருந்தவர்.

ஆசிரிய பயிற்சிபெற்று மன்னார், நீர்வேலி, இளவாலை முதலிய இடங்களில் ஆசிரியப்பணிபுரிந்த திரு துரைசிங்கம் கடைசியாகத் தமது சொந்த ஊரில் உள்ள றோ. க. பாடசாலையில் கடமை புரிந்தார்

வலிகிழக்குத் தமிழாசிரிய சங்கத்தைக் கட்டி வளர்த்து அதன் பொருளாளராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்தார். வசாவிளான் றோ க. பாடசாலையில் உன்னத வளர்ச்சிக்கு இவரே காரணகர்த்தா ஆவர். இக் காலத்திலேயே வவுனியா சென்று விவசாயப்பயிற்சி பெற்றுத் திரும்பவும் தமது பாடசாலைக்கு வந்து சேர்ந்து சமய சமூகப்பணிகளிலும் தொழிற்சங்க வளர்ச்சியிலும் முழுநேர ஊழியனாக வேலைசெய்தார்.

கடந்த இரண் ஆண்டுகளாக வட இலங்கைத் தமிழாசிரிய சங்கத்தின் கௌரவ தனாதிகாரிப் பணியை ஏற்றுக் கடமையைத் திறம்படச் செய்து ஆசிரியர்களின் பிரச்னைகளைத் தீர்த்துவந்தார் சிறந்த விளையாட்டு வீரராகிய இவர் ஆசிரியராகிய பின்பும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டு முதற் பரிசில்களைப் பெற்றார்.

அவரது இழப்பு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்ல ஆசிரிய உலகுக்கே பெரு நட்டமாகும். அன்னாரின் நினைவு மலராக இய தினம் மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் 'துரைசிங்கமலர்' ஆசிரிய நண்பர்களால் வெளியிடப்படுகிறது. அவரது ஆத்மா சாந்தி அடைவதாக.

— பண்டிதர்
வீ.வ நல்லதம்பி

— —

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 25-வது வருடாந்தக் கூட்டம் மன்றத்தலைவர் திரு அ. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு அ. இராசரத்தினம், உப தலைவர் திரு செ. இராஜரத்தினம், செயலாளர் திரு கனகசேகரன், தனாதிகாரி திரு அ. பரமேஸ்வரன் வாசிகசாலை அதிபர்: திரு அ. வாமதேவன்.


ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேசன் - ஜெயலலிதா
நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ராஜன் - வாணிஸ்ரீ - சோ - சிவகுமார் - குமாரி லட்சுமி
நடித்த
அன்னையும் பிதாவும்

5-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு
பிளாஸா (கொழும்பு
சிவாஜி
காஞ்சனா
எம். என், நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த





சிவந்த மண்

கன்னாகம்
நாகம்ஸ் சினிமா
தினசரி 3 காட்சிகள்
போயாதினங்களில் 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - சாவித்திரி
நடித்த
மகாதேவி

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
எம் ஜி. ஆர். பி. எஸ். சரோஜா
நடித்த
புதுமைப் பித்தன்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2 30
சிவாஜி - சௌகார் ஜானகி
நடித்த
மகாகவி காளிதாஸ்

MANOHARA
Jaffna
Daily 3 Shows
Poya days 10-30 a. m.
Andy Griffith
in
ANGEL IN MY POCKET
(Technicolor)

Last day
RAJAH Jaffna
Daily 3 Shows
Giuliano Gemma
in
BLOW HOT, BLOW COLD
(Color - Adults)

REGAL Jaffna
Daily 3 shows
Poya days 10-30 a. m.
Margaret Brooks
Louis Gossett
in
THE BUSH BABY

# இந்தியப் பொதுத் தேர்தல்

# 518 லோகசபை தொகுதிகளில் 2750 பேர்போட்டி

## பெரும்பான்மை இடங்களுக்கு இந்திராகாங்கிரஸ்வேட்பாளர்கள்

புதுடில்லி, பெப். 4

**இந்திய ஆட்சிமன்றத்துக்கான (லோக சபை) 518 இடங்களில் சுமார் 2750 வேட்பாளர்கள் இறுதியாகப் போட்டியிடுகிறார்கள்.**

வேட்புமனுக்களைத் திரும்பப்பெற்றுக் கொள்ளும்கடைசிநெடு நேற்றுடன் முற்றுப் பெற்றது.

தேசிய அடிப்படையில் இயங்கும் 8 கட்சிகளும்பிராந்திய அடிப்படையில் இயங்கும் 40 கட்சிகளும் இந்த வேட்பாளர்களில் பெரும்பான்மையானவர்களை நிறுத்தியுள்ளன.

1967ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களைவிட 318 பேர் இந்தமுறை அதிகமாகும் 2364 பேர் அப்பொழுது போட்டியிட்டார்கள்.

ஜெகஜீவன்ராம் தலைமையிலான இந்தியதேசிய காங்கிரஸ் கட்சி சுமார் 442 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியிருக்கின்றது தமிழ்நாடு. கேரளம் ஆகிய தொகுதிகளைத் தவிர ஏனைய எல்லா மாநிலங்களிலும் தனித்து நின்றே இக்கட்சி போட்டியிடுகின்றது.

நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸ்கட்சி 240 இடங்களுக்கு வேட்பாளர்களை நியமித்திருக்கின்றது. ஜனசங்க கட்சி 150 இடங்களுக்கும் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி 90 இடங்களுக்கும். இந்திய கம்யூனிஸ்ட்கட்சி 85 இடங்களுக்கும். சுதந்திரா பிரஜா சோஷலிஸ்ட் மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவை சுமார் 60ல் இருந்து 70 வரையான இடங்களுக்கும் போட்டியிடுகின்றன.

ஜனசங்கம், சுதந்திரா சம்யுக்த சோஷலிஸ்ட்கட்சி நிஜலிங்கப்பா காங்கிரஸ் ஆகிய நான்குகட்சி கூட்டணி அனேகமாக எல்லா இடங்களுக்கும் போட்டியிடுகின்றன.

இந்தியாவில்

## புதிய அரசியல் அமைப்பை மக்களே உருவாக்கவேண்டும்

### மசானி கருத்து

"புதிய ஒரு அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு ஆட்சிமன்றத்திற்கு உரிமையில்லை. அதைச் செய்யவேண்டியவர்கள் மக்கள் என்று சுதந்திரக்கட்சித் தலைவர் திரு எம். ஆர். மசானி கூறினார்.

அவர்மேலும் பேசுகையில் ஒரு நாட்டிற்குரிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்குரிய உரிமை மக்களுக்கே உண்டு மக்கள் தான் ஆட்சிமன்றத்தைவிட சக்தி உடையவர்கள மக்களுக்குள்ள அடிப்படை உரிமைகளை ஆட்சிமன்றம் தகர்க்கமுடியாது என்றார்.

திரு. மசானியின் மகனும் மகனும் ஜெகஜீவன்ராம் தலைமைக்காங்கிரஸ் இனைக்கு வாக்களிக்குமாறு மக்களைக் கேட்டுக் கொள்வது பற்றி கேள்வி கேட்கப்பட்ட பொழுது. ஒரு குடும்பத்திலுள்ள வயது வந்தவர்கள தங்கள் கொள்கைகளுக்காகப் பாடுபட உரிமை உண்டு. நான் ஓர் சிறந்த ஜனநாயகவாதி என்பதினால் அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளுகின்றேன் எனக்குள் எவ்வித தகராறும் கிடையாதென்றார்.

லாகூரில் இந்தியவிமானம் எரிக்கப்பட்டதைக் குறிப்பிடுகையில் பாரதம் இவ்விஷயத்தில் எடுத்த நடவடிக்கை சரியானது. நியாயமானது. ஆனால் ஜேர்மானில் கடத்தப்பட்ட விமானங்கள் தாக்கப்பட்ட பொழுது இந்தியா இவ்வித நடவடிக்கையை எடுக்கத் தவறிவிட்டதென்றார்.

## இந்தியாவிடம் பாக். நஷ்டஈடு கோருகிறது

புதுடில்லி,பெப் 14 லாகூரில வைத்து அழிக்கப்பட்ட இந்திய விமானத்திற்கு நஷ்டஈடு தருமாறு இந்தியா கோரியதை பாகிஸ்தான் மீண்டும் தட்டிக்கழித்துள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

இஸ்லாமாபாத்திலுள்ள இந்தியத் தூதரகத்திடம் பாகிஸ்தான் குறிப்புஒன்றை கையளித்துள்ளது. இந்தக் குறிப்பில் அழிக்கப்பட்ட விமானத்திற்கான நஷ்டஈடு பற்றி எதவித குறிப்பும் இல்லை. ஆனால் அதற்குமாறாக இந்தியாமீது பாகிஸ்தான் விமானங்களைப் பறக்ககூடாதென்று இந்தியாவிதித்த தடைஉத்தரவால், பாகிஸ்தானுக்கு ஏற்படும் செலவினங்களுக்கு இந்தியா நஷ்டஈடுதரவேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

## இந்தியா எத்திசையில் போக விரும்புகிறது?

### மக்கள் தீர்ப்பை கோருகிறார் இந்திரா

சென்னை, பெப் 14 சுதந்திர போராட்ட காலத்தில் இருந்ததுபோல் இப்பொழுதும் மக்கள் மத்தியில் உணர்ச்சி நிலவ வேண்டுமென்று இந்திய பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி கூறினார்.

தமிழ்நாட்டில் தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு, மற்றும் புதுச்சேரி ஆகிய இடங்களில் பிரதமமந்திரி பேசினார்.

நாட்டின் செல்வம் சமமாகப் பகிர்ந்துபடவேண்டும் இதன்காரணமாக நாட்டின் போக்கில் மாற்றம் அவசியம் தேவை. நாடு எத்திசையில் போக வேண்டுமென்பதை மக்கள் தீர்மானித்தாகவேண்டும். எனவே இப்போது நடைபெறப்போகும் தேர்தல் மிக முக்கியமானதாகும் என்று பிரதமமந்திரி கூறினார்.

# பாக். தேசிய சட்டசபை மார்ச். 3-ல் கூடுகின்றது

### 120 நாளில் அரசியல் திட்டம் உருவாகவேண்டும்

டாக்கா. பெப். 14 பாகிஸ்தான் தேசிய சட்டசபை மார்ச் மாதம் 3ம் திகதி டாக்காவில் கூடவிருக்கிறது. இதற்கான அறிவித்தலை பாகிஸ்தான் ஜனாதிபதி திரு யாஹ்யாகான் அறிவித்துள்ளார்.

டிசம்பர் மாதம் நடந்த தேர்தலின்பின் இப்பொழுது தான் தேசிய அஸம்பிளி கூட்டுவதற்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் தேசிய சட்டசபை கிழக்குப் பாகிஸ்தான் மாகாண சட்ட சபைக் கட்டிடத்தில்கூடும் தேசியசட்டசபைகூடி. நாட்டிற்கு வேண்டிய புதிய அரசியல் திட்டத்தை அமைப்பதில் ஒற்றுமைகாணத் தவறும் பட்சத்தில். நடந்துமுடிந்த தேர்தலை ரத்துச்செய்யவேண்டி ஏற்படுமென பாகிஸ்தான் ஜனாதிபதி திரு யாஹ்யாகான் தெரிவித்தார். சபை முதல் தடவையாகக்கூடி. 120 நாட்களுக்குள் புதிய அரசியல்திட்டம் உருவாக்கப்படவேண்டும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பரில் நடந்த தேர்தல் மூலம் கிழக்குப் பாகிஸ்தானில் அமோக வெற்றி பெற்றதுடன், பாகிஸ்தான் தேசிய சட்டசபையில் பெரும்பான்மை பலம் பெற்றுள்ள முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான், பாகிஸ்தான் புதிய அரசியல் அமைப்புப்பற்றியும் பொருளாதாரத்திட்டங்கள் பற்றியும் முன்னாள் விமானப் படைத்தளபதி திரு அஸ்ஹர்கானுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இதற்கிடையில் திரு சுல்பிகார் அலிபூட்டோ மேற்குப்பாகிஸ்தானில்தேர்தலில் தோல்வியுற்ற கட்சித்தலைவர்கள் உட்படப் பல அரசியல் கட்சித்தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியதோடு ஜனாதிபதி யாஹ்யாகானுடனும் நாட்டின் எதிர்கால பொருளாதாரத்திட்டம்பற்றியும்புதிய அரசியல் அமைப்புப் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பாகிஸ்தானில் கடந்த 13 ஆண்டுகளாக நடைபெற்ற ராணுவ ஆட்சியிலிருந்து மக்கள ஆட்சி மலரவிருக்கும் இந்நேரத்தில் சில அரசியல் சுயநலமிகள் அதனைச் சிதைப்பதற்கு இரகசியத்திட்டங்கள் தீட்டிவருவதாக கிழக்குப் பாகிஸ்தான் பீப்பிள் என்னும் பத்திரிகை குற்றஞ்சாட்டியுள்ளது.

## 18 சங்கங்கள் சேர்ந்தன

பருத்தித்துறை,ஞாயிறு வடமராட்சிப் பகுதியிலுள்ள 18 கூட்டுறவுச் சங்கங்களும் ஒன்றாக இணைந்து உருவாக்கியுள்ள கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கப் பொது கூட்டம் நேற்று மாலை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமண்டபத்தில் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு எஸ் சௌந்தரராசா தலைமையில் நடைபெற்றது

விவசாயிகள் பொதுமக்கள் ஆகியோருக்கு கடனுதவிகள் வழங்குவதற்காக ரூபா 2கோடி ஒதுக்கியுள்ளதாக இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## ரயில்முன் பாய்ந்து மரணம்

எழுதுமட்டுவாழ், ஞாயிறு யாழ்தேவி ரயில் முன் பாய்ந்து 28 வயது நிரம்பிய வாலிபர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டார். மிருசுவிலுக்கும் எழுதுமட்டுவாழுக்குமிடையில் இச்சம்பவம் நடைபெற்றது.

மரணமானவரின் உடலை ரயிலிலேயே ஏற்றிச்சென்று பளை அரசினர் ஆஸ்பத்திரிக்குக்கொண்டுசெல்லப்பட்டு மரண விசாரணை நடைபெற்றது. முகமாலையைச்சேர்ந்த இ. கந்தசாமி என்ற வாலிபரே இவ்விதம் ரயில் முன் பாய்ந்து மரணமானதாக விசாரணையில் அடையாளம் காணப்பட்டது. மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## உருளைக்கிழங்கு போல் இருக்கிறதாம் சந்திரக் கல்?

### திருமதி மிச்சல் வர்ணனை

ஹூஸ்டன்,பெ.14 அப்பலோ- 14 வீரர்கள் தமது சந்திரப் பயணத்தின் பொழுது எடுத்த 13 படங்களை ஹூஸ்டன் அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர். இவைகளில் 9படங்கள் வர்ணத்தில் எடுக்கப்பட்டன.

அப்பலோ- 14 வீரர்கள் கொண்டுவந்துள்ள சந்திர மண்மாதிரிகளை முதல் தடவையாக ஆராய்ந்ததில் சந்திரனின் ஆரம்ப காலம்பற்றிய முக்கிய தகவல்கள் இதில் வெளியாகலாம்என்று தெரிய வந்துள்ளதாக விஞ்ஞானிகள் அறிவித்திருக்கிறார்கள். என்றாலும் தமது முதல் ஆய்வுபற்றிய விபரங்களை வெளியிடுவதில் அவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருந்தனர்.

அதேசமயம் இந்தமண் கட்டிகளை முதலில் பார்த்த திருமதி மிச்சல் வெளிப்படையாகவே தம்கருத்தை வெளியிட்டார். 'அதுஎன்ன ஒரு கறுப்பு உருளைக்கிழங்கு மாதிரி இருக்கிறது' என்று அவர்சொன்னார் அந்தபாறைகள் 'அழுக்காய்' இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சந்திரனுக்குப் போக விரும்புகிறீர்களா என்று கேட்டதற்கு 'சரிதான் நான் அங்கு போவதற்கு முன் இவர்கள் அதை சுத்தமாக்கவேண்டியிருக்கும்' என்றார் திருமதி மிச்சல் ரோட்டரி சங்கம் ஒன்றின் விருந்துபசார மொன்றில் கலந்து கொள்ளச்செல்லும் வழியில் விண்வெளி நிலையத்திற்கு திருமதி மிச்சல் வந்தார்.

விண்வெளி வீரர் திரு எட்கார் மிச்சல் தமது சந்திர பயணத்தின் போது 'தொலை உணர்வு' ஆய்வொன்றையும் நடத்தியதாக ஒப்புக் கொண்டிருக்கிறார். இது தமது பிரயாணத்திட்டங்களுடன் சம்பந்தப்படாத வகையில் தனிப்பட்ட முறையிலேயே நடைபெற்றதாம்.

### வெள்ளைக்கடற்கரை

அல்லைப்பிட்டி, ஞாயிறு பிரசித்தி பெற்ற வேலணை வெள்ளைக்கடற்கரைப் பகுதி உல்லாசப் பிரயாணிகளைக் கவரக் கூடிய இடமாகையால் இவ்விடத்தை அரசினரின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும் மென தீவுப்பகுதி ஐக்கிய இளைஞர் முன்னேற்றக்கழக வருடாந்தக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

**மணிவாக்கு**

அமைதிக்காக ஆயுதங்கள் மட்டும் போதா மக்களும் அகனேக்காக்கவேண்டும். மக்கள் குலம் போரை ஒழிக்கவேண்டும். இல்லேயேல் மக்கள் குலத்தைப் போர் ஒழித்துவிடும். —கென்னடி

# ஈழநாடு

Ee'anadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

வாழ்ப்பாணம் சாதாரண வருஷம் மாசி மாதம் 3 ந்திகதி ( 15-2-71 )

## சிரமதானம்

சிரமதான தேசிய சேவையில் எல்லோரும் ஈடுபடவேண்டுமென்றும் இது நாட்டுப்பற்றுள்ள ஒவ்வொருவரினது கடமையுமாகுமென்றும் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின அரசாங்க உதவியுடன் அமைக்கப்பட்டுவரும் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டப வேலையில் தமது அமைச்சர் குழுவுடன் சிரமதான வேலையை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார். பிரதம மந்திரியும் அமைச்சர்களும் சிரமதான சேவையில் ஈடுபட்டு நாட்டு மக்களுக்கு வழிகாட்ட முன்வந்தது பாராட்டத்தக்கது. ஆளுக்கு ஆண்டுக்கொரு தடவையோ எப்போதாவது ஒரு வைபவத்திலேயோ இவ்வித சிரமதானத்தைச் செய்வதுடன் திருப்திகொள்ளாமல் வாரம் ஒரு தடவையோ மாதம் ஒரு தடவையோ சிரமதான தேசிய சேவைக்கும் ஒரு தினத்தை அமைச்சர் குழு ஒதுக்கிவைப்பது அவர்களுக்கு உடற்பயிற்சியாகவும் மற்றவர்களும் தொடர்ந்து சேவையில் ஈடுபடுவதற்கு முன்மாதிரியாகவும் இருக்கும்.

அரிசி, கல்வி இலவசமாகக் கிடைப்பதால் எல்லாமே இலவசமாகக் கிடைக்கவேண்டும் என்ற மனப்பான்மையும் சும்மா இருந்தே சுகம் அனுபவிக்கவேண்டுமென்ற விருப்பமும் மக்கள் மனதில் ஏற்படக்காரணமாக இருக்கிறது. நமது தேவைகள் யாவற்றையுமே அரசாங்கம் தான நிறைவேற்றித்தர வேண்டுமென்ற எண்ணமும் மக்கள் மனதில் வலுப்பெற்றுவருகிறது நமது நாடு முன்னேற முடியாமலிருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இந்த மனப்பான்மையை மாற்றி மக்கள் மனதில் நாட்டுப்பற்றையும் உழைக்கவேண்டுமென்ற சிந்தனையையும் ஏற்படுத்தி மக்களின் உழைப்புச் சக்தி நாட்டிற்குப் பயன் படச்செய்வதற்கும் இந்தச் சிரமதான தேசிய சேவை வழிகாட்ட உதவவேண்டும்.

ஒவ்வொருவரும் நமது ஊர் நமது கிராமம், நமது நகரம், நமது நாடு என்று சிந்தித்து இவற்றுக்காக நாம் உழைக்கவேண்டும் என்று சிந்திக்கத் தொடங்கினால் தேசிய ஒற்றுமையும் ஏற்படும். நாடு துரிதமாக முன்னேறமுடியும்

பிரதமரும் அமைச்சர்களும் காட்டியுள்ள முன்மாதிரியைப் பின்பற்றி உள்ளூராட்சி மன்றத் தலைவர்களும் உறுப்பினர்களும் வாரத்துக்கு ஒரு தடவையாவது வட்டாரம் வட்டாரமாகச் சிரமதான சேவையில் ஈடுபட்டால் ஊரும் நகரமும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் விளங்குவதுடன் தலைவர்கள் மேயர்களை இறக்கியேற்றும் பிரச்னைகளும் குறைந்து ஒற்றுமை நிலவ வழி பிறக்கும்.

இதேசமயம் பிரதமரும் அமைச்சர்களும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் வந்து சிரமதான சேவையில் ஈடுபடவும் இப்பகுதி ஆட்சி மன்ற உறுப்பினர்களும் மக்களும் தென்னிலங்கைப் பகுதிகளுக்குச் சென்று சிரமதான சேவையில் ஈடுபடவும் திட்டம் வகுத்துச் செயற்படுத்தினால் தேசிய ஐக்கியமும் உருவாகும்.

# 'பேராசிரியர் ஸ்ரீநிவாசன்'

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் அதிபராயிருந்து ஓய்வு பெற்ற பரமஸ்ரீ சி. ஸ்ரீநிவாசன் அவர்கள் பல வழிகளில் எமது மதிப்புக்குரியவர். சிறந்த கல்விப் பாரம்பரியத்துடனேயே பிறந்தவர். ஆங்கிலத்திலும் தமிழிலும் வடமொழியிலும் மிகச் சிறந்த புலமையுடையவர். அத்துடன் அந்தணர்களுக்கு இயல்பாகவே இருக்க வேண்டிய தண்ணளியும் அன்புமுடையவர். இந்த நற்குணங்கள் அவரை இக் கல்லூரிக்குத் தகுதியான ஒரு அதிபராக விளங்கச் செய்தன ஆசிரியர்களாகிய எங்களையும் மாணவரையும் கவரச் செய்தன.

இலங்கையிலேயுள்ள புகழ் பெற்ற ஆங்கில ஆற்ஞரைவ சிலருள் எமது அதிபர் முதல் வைத்து எண்ணத்தக்கவர் அத்துடன் அவர் இளைஞர்களை எழுத்துத்துறையிலும் கல்வித்துறையிலும் ஊக்கப்படுத்தியவர். பல கல்விமான்களை உருவாக்கியவர். அத்துடன் விளையாட்டுத் துறையிலும் புகழ் பெற்றவர்.

ஐம்பலம் புகழ் வாய்ந்த வரும் எம். ஏ, பட்டதாரியுமாகிய ஒருவர் எமக்கதிபராக வந்து வாய்த்தது நமக்கும் நமது கிராமத்துக்கும் கல்லூரிக்கும்பெருமையைத் தந்தது.

எமது வலிகாமம் கிழக்குத் தமிழாசிரிய சங்கத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் எங்கள் அதிபருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். ஆசிரிய சங்கத்தினராகிய நாங்கள் எங்களுடைய நிர்வாகசபைக் கூட்டங்களையோ பொதுக் கூட்டங்களையோ அல்லது விழாக்களையோ நடத்த விரும்பும் போது மிக உற்சாகத்தோடும் மகிழ்ச்சியோடும் முன்வந்து எங்களுக்கான ஒத்துழைப்பைத் தந்ததோடு இக் கட்டடத்தை நாங்கள் உபயோகிப்பதற்கு அவர் எல்லா வசதியையுஞ் செய்து தந்தார் அவர் சிறந்த அறிவாளியாகவும் கல்விமானாகவும். அந்தணராகவும் இருந்ததோடு எல்லாருக்கும் உறவினர் போலவும் நண்பர் போலவும் பழகிக்கொண்டார். அத்தகைய ஒருவர் எங்கள் மத்தியிலிருந்து விலகி இளைப்பாறிச் செல்வது எங்களுக்கு மிகுந்த கவலை தருவதாகும்.

(7-ம் பலம் பார்க்க)

# நாவலப்பிட்டியில் நா...

# ல. தோ. யூனியன்...

## 20 ஆயிரம் பேருக்குமேல் கலந்து கொள்வர்

— நமது நாவலப்பிட்டி நிருபர் பி. மகாலிங்கம் —

நாவலப்பிட்டி, ஞாயிறு

நாவலப்பிட்டியில் அடுத்த 16, 17-ம் திகதிகளில் ஆரம்பமாகவிருக்கும் லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் 27-வது வருடாந்த மகாநாட்டில் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து சுமார் இருபதாயிரம் பேர்வரை கலந்து கொள்வார்கள் என்றுஎதிர்பார்க்கப்படுகின்றது.

மாநாட்டின் நிகழ்ச்சிகளில் சமசமாஜக்கட்சியின் பெருந்தலைவர்கள் பலரும் கலந்து கொண்டு உரைகள் நிகழ்த்தவிருக்கிறார்கள்.

தோட்டத் தொழிலாளரின் பல்வேறு பிரச்னைகளுக்கும் இம்மகாநாடு தீர்வு காணக்கூடியதாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய வம்சாவழியினரையே பெரும்பான்மையாகக் கொண்ட தோட்டப் பகுதி தொழிலாளர்களின் பல்வேறு பிரச்னைகள்பற்றியும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும் என்றும் இந்த மக்களின் எதிர்கால விடிவுக்கு இந்த மாநாடு வழி வகுக்கும் என்றும் எதிர் பார்க்கப்படுகின்றது.

### நிகழ்ச்சி விபரம்

லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் 27-வது வருடாந்த மகாநாடு இம் மாதம் 16ம், 17ம் திகதிகளில் நாவலப்பிட்டி 'முல்லோயா கோவிந்தன்' அரங்கில் நடைபெறுகிறது.

### 16-2-71 நிகழ்ச்சிகள்

மாதர்கள் செந்தொண்டர்கள் மகாநாடு நாவலப்பிட்டி நகரசபை மண்டபத்தில் பி ப 2 மணிக்கு போக்குவரத்து அமைச்சர்கள் திரு லெஸ்லி குணவர்த்தன தலைமையில் நடைபெறும்.

விசேட பேச்சாளர்களாக நிதிஅமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா, செனட்டர் திரு டி ஜி வில்லியம், திருமதி விவியன் குணவர்த்தன எம் பி, திரு சுமனபாலதஹநாயக்கா எம் பி, திரு வாசுதேவ நாணயக்கார எம் பி, திருமதி பத்மா சிவகுருநாதன், திரு வி எஸ் ராஜா.

## தோட்டத் தொழிலாளர் நலன் பேணும்

# முப்பத்தாறு தீர்மானங்களை நிறைவேற்றுவராம்

## மாவட்ட செயலாளர் தகவல்

"தற்போதைய கூட்டு முன்னணி அரசாங்கத்தை அமைப்பதில் லங்கா தோட்டத்தொழிலாளர் யூனியன் அங்கத்தினர்கள் பெரும் பங்கு வகித்திருக்கிறார்கள். எனவே எமது யூனியனின் கோரிக்கைகளையும் தீர்மானங்களையும் அரசாங்கம் அங்கீகரித்து நடைமுறையில் செயலாக்கவேண்டும். இம்மாதம் 16-ம் 17-ம்திகதிகளில் நாவலப்பிட்டி "முல்லோயா கோவிந்தன் அரங்கில்" நடைபெறவிருக்கும் எமது யூனியனின் 27-வது வருடாந்த மகாநாட்டில் சுமார் இருபதாயிரம் தோட்டத்தொழிலாளர்களும் மாதர்களும்செந்தொண்டர்களும் பங்குபற்றுவார்கள் முதலாளித்துவத்தை ஒழித்துக்கட்டி சமதர்மத்தை நிலைநிறுத்துவதற்கான முயற்சிகளுக்கு முன்னோடியாக இம்மகாநாட்டில் தோட்டத் தொழிலாளர்களின் நலன் கருதும் முப்பத்தாறு தீர்மானங்களையும் சமர்ப்பித்து அவற்றைச்சட்டங்களாக்குவதற்கு அரசாங்கத்தை வற்புறுத்த இருக்கிறோம்."

இவ்வாறு லங்கா தோட்டதொழிலாளர் யூனியன் நாவலப்பிட்டி மாவட்டச் செயலாளர் திரு. சு. பிரியசிவன் மேற்படி யூனியன் 27-வது மாநாட்டை ஒட்டி நமது நிருபருக்களித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் கூறியதாவது:

வெள்ளை ஏகாதிபத்தியத்தின் வெறியாட்டத்தில் வாழ் விழந்து சீரழிந்து சின்னாபின்னப்பட்ட மலையக மக்கள் வாழ்விலே விழிப் புணர்ச்சி ஏற்படுத்திப் புரட்சிப்பாதையிலே அவர்களை வழிநடத்திச் சென்ற பெருமை லங்கா சமசமாஜக் கட்சிக்கும் அதன் கீழுள்ள லங்கா தோட்டத்தொழிலாளர் யூனியனுக்குமே உரிமையாகும். எமது யூனியன் உள்ளூர்க்கறுப்பு முதலாளித்துவத்திற்கும் அந்நிய ஏகாதிபத்தியத்திற்கும் எதிராகக் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக நடாத்திய வர்க்கப் போராட்டங்களின் பயனை முன்னேற்றப்பாதையில் சரியாகச் சென்று கொண்டிருக்கிறோம் அன்று முல்லோயாத் தோட்டத்தில் தோழர் கோவிந்தன் மரணத்தில் மூண்டெழுந்த புரட்சித்தீ எப்படி எங்கும் பரவியதோ அதே போல நாவலப்பிட்டியில் நாமெழுப்பப்போகும் உரிமைக்குரல் நாட்டையே விழித்தெழச் செய்யப் போகிறது. முதலாளித்துவ வலதுசாரி பிற்போக்குவாதிகட்கும் கருங்காலித் தொழிற்சங்கங்களுக்கும் எதிர்காலத்தில் இடமில்லை, தோட்டத் தொழிலாளர்களின் சுபீட்சம் கருதிச் செயாற்ற நமது யூனியனுக்கு மட்டுமே சாத்தியம்'-என்றார்.

திருவாளர்கள் எஸ் பி தர்மலிங்கம் [மாவட்ட தலைவர் ல தோ தொ யூ), கே ஷெல்டன் டி சில்வா ஆகியோர்.

மாலை 5மணி முதல்மாதர் செந்தொண்டர் நடப்பு வருட உத்தியோகஸ்தர் தெரிவு.

இரவு 8மணிக்கு கலைநிகழ்ச்சிகள் நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலய மண்டபத்தில் தோழர் சந்திரகுணசேகரா எம் பி தலைமையில் நடைபெறும்

## 17-2-71 நிகழ்ச்சிகள்:

### பிரதிநிதிகள்மகாநாடு

நாவலப்பிட்டி மிட்லண்ட் படமாளிகையில் டாக்டர் என் எம் பெரேரா தலைமையில் நடைபெறும்.

காலை 9 மணி, செயலாளர் அறிக்கை-பரிசிலனைகள்.

காலை 10 மணி தனாதிகாரி அறிக்கை-பரிசிலனை,

காலை 10-30 மணி கோரிக்கைகள்- தீர்மானங்கள்.

காலை 11 மணி நடப்பு வருட உத்தியோகஸ்தர் தெரிவு.

பகல் 12 மணி சொற்பொழிவு டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா.

பகல் 1மணி மாபெரும் ஊர்வலம்,

பி ப 2 மணி மாபெரும் பொதுக்கூட்டம் வாகன்ஸ் பார்க்கில் 'முல்லோயா கோவிந்தன் அரங்கில்' நடைபெறும். டாக்டர் என் எம் பெரேரா சொற் பெருக்காற்றுவார்.

மகாநாட்டையொட்டி விசேட பஸ் போக்கு வரத்துக்கள் செய்யப்பட்டுள்ளன.

## கிரா...
## அபிவி...

அரால...

வலி-மேற்கு கா...
ரிப் பிரிவில் ...
கோட்டை தேர்த...
தியில் மூன்று அ...
சபைகள் நிறுவ...
சுழிபுரம் கி. ச. ...
ஒரு சபையும், ச...
ப. ச., பண்டத்தரி...
பண்டத்தரிப்பு கி, ...
பிற்குஇன்னொன்று...
கி. ச., வட்டுக்கோ...
ச. வுக்கு ஒரு ச...
அமைப்பதெ...
மாவட்ட அரசா...
பர் தீர்மானித்து...
அபிவிருத்திச் ச...
முக்கிய நோக்கம்...
ஒவ்வொரு சபை...
பரப்பிலுள்ள மூல...
வசதிகளை ஆராய்...
தொழில்களை ஆ...
விவசாயத்தை பெ...
வாலிபர்களுக்...
வாய்ப்பைத் ...
போன்ற நோக்...
இச் சபை நிறுவப...
கின்றன.

## ஆலய...க்...
## வீதியி...

மாங்குளம்...
மாங்குளம் இத்...
சித்திவிநாயகர் ஆ...
ரகங்களை சில ...
பெயர்த்து வீதியி...
டுச் சென்றுள்ளத...
கிறது.

அரசாங்க இலாக...
கடமையாற்றும் ...
இவ்வித செயலில் ...
தாகக் கூறப்...
கிராமசேவையாள...
பொறுப்பதிகா...
தொடர்பு கொ...
ராம்.

## 'மனு...
## தெரி...

அரசியல...

கோட்டை...
அரசியலமைப்பு...
சட்ட விரோதமா...
றும் அச்சபையில் ...
பட்ட முடிவுகளை...
செய்து அச்சபை...
படியாகாதென ...
விடும்படியும் ...
ஞன் வவனியா ...
திரு. எவி. சுந்...
தாக்கல் செய்த...
விசாரணை செய்த...
சர் அதைத் ...
செய்ததற்...
ணத்தை நேற்று ...
தெரிவித்தார்.

இம்மனுவை ...
தற்குரிய கா...
பிரதம நீதியர...
எச். என். ஜி. பொ...
வெளியிட்டார். ...
ரம் வருமாறு:

மனுதாரான தி...
லிங்கம் பிரதிவ...
நோட்டீஸ் பிறப்...
டும் என்று கோரி...
தகுந்த கார...
தெரிவிக்கத் ...
டார்.

# நாளை ஆரம்பமாகும்
# ...ன் 27-வது மாநாடு

## கிராமந்தோறும் ...பிவிருத்திச்சபைகள்

அராலி, திங்கள் ...மற்கு காரியாதிகா ...வில் வட்டுக் ...ட தேர்தல் தொகு ...ன்று அபிவிருத்திச் ... நிறுவப்படும். ... கி. ச. பகுதிக்கு. ...பயும், சங்கானை ...ண்டத்தரிப்பு ப.ச, ...தரிப்பு கி. ச. பரப் ...லென்றும், அராலி ...ட்டுக்கோட்டை கி. ... ஒரு சபையும் ...படுமென யாழ். ... அரசாங்க அதி ...மானித்துள்ளார்.

...ருத்திச் சபைகளின் ...நோக்கம்

...ரு சபையின்நிலப் ...ள்ள மூலப்பொருள் ... ஆராய்ந்து கைத் ...களை ஆரம்பித்தல் ...த்தை பெருக்குதல், ...ர்களுக்கு வேலை ...பத் தேடுதல் ... நோக்கத்துடன் ...ப நிறுவப்படவிருக்

ஓர் அபிவிருத்திச் சபையில அச்சபையின் எல்லைகளுக்குட்பட்ட உள்ளூராட்சி மன்ற சகல உறுப்பினர்களும். கூட்டுறவுச் சங்கம், பயிர்ச்செய்கைக் குழு, முன்னேற்றச் சங்கங்கள் 'மாதர் சங்கங்கள் ஆகிய நிறுவனங்களிலிருந்து ஒவ்வொருபிரதிநிதியும் அங்கம் வகிப்பர்.

வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதிக்குரிய அபிவிருத்திச் சபைகளின் அங்குரார்ப்பணக் கூட்டமொன்று சித்தங்கேணி கணேச வித்தியாசாலை மண்டபத்தில் இம்மாதம் 16-ந் திகதி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

(2-ம் கலத் தொடர்ச்சி)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உடும்பராய் இந்துக்கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி முதலாம் உயர்தரக் கல்லூரிகளின் இன்றைய வளர்ச்சிக்கு உழைத்தவர்களுள் தலையாயவரே அதிபர் ஸ்ரீனிவாசன். செந்தமிழ் ஆங்கிலம் சமஸ்கிருதம் ஆகியமும் மொழிப் புலமையும் ஒருங்கேயமைந்த அதிபர் ஸ்ரீநிவாசனை ஓர் ஆசிரியர்என்றோ அதிபர் என்றோ கூறுவது பொருத்தமற்றது. பேராசிரியர் ஸ்ரீநிவாசன் என்றுகூறுவதே பொருந்தும். நம்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் ஆங்கிலத்துறைக்குப் பேராசிரியராய் இருக்கக்கூடியஒரு பெருந்தகைமை ஸ்ரீநிவாசனுக்கு உண்டு என்றால்மிகையாகாது. நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் அதிபர் பதவியில இருந்த பிரம்மஸ்ரீ சீ. ஸ்ரீநிவாசன் விலகினாலும் பெற்றோர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் மனதைவிட்டு ஒருபோதுமே விலகமாட்டார், எல்லோர் மனதிலும் நீங்காத இடம் பெற்றுவிட்டார் பேராசிரியர் ஸ்ரீநிவாசன். அவர் பல்லாண்டு வாழப் பிரார்த்திப்போம்.

ம; நடராசா
(ஆசிரியர்)

## ...விக்கிரகம் ...வீதியில்

...மாங்குளம், ஞாயிறு ...னம் இத்திமரத்தடி ...ாயகர் ஆலய விக்கி ... சில விஷமிகள் ...து வீதியில் போட் ...ன்றுள்ளதாகத் தெரி

...ம் இலாகா ஒன்றில் ...பாற்றும் இருவரே ...செயலில் ஈடுபட்ட ... கூறப்படுகிறது. ...சவையாளர் இலாகா ...ப திகாரியுடன் ...பு கொண்டுள்ளா

## பட்டதாரிகளுக்கு கூட்டுறவு பயிற்சி இன்று ஆரம்பம்

மாவிட்டபுரம், ஞாயிறு பட்டதாரிகள் கூட்டுறவுப் பயிற்சித் திட்டம் நாளை ஆரம்பமாகவிருக்கிறது. நாடு பூராவுமுள்ள கூட்டுறவு பயிற்சிக் கல்லூரிகளில் இந்தப் பயிற்சி நடைபெறும்.

வட பகுதியில் இத் திட்டத்தின் கீழ் 86 பட்டதாரிகள் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களில் 30 பேருக்கு முதலில் பயிற்சி அளிக்கப்படும். இதகான வகுப்புகள் நாளை யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமாகிறது.

படிப்படியாக ஏனையோருக்கும் பயிற்சி அளிக்கப்படும். ஒரு வருடகால பயிற்சி முடிவடைந்ததும், புனரமைப்புச் செய்யப்படும் கூட்டுறவு சங்கங்களில் இவர்களுக்கு வேலை வசதி வழங்குவதில் முதலிடம் அளிக்கப்படும் எனத் தெரிகிறது.

புதிய அரசியல் திட்டத்தில்

## தமிழினத்தை பூண்டோடு அழிக்க வழிசெய்யப்பட்டுள்ளது

### அரசாங்க எழுது வினைஞர் சங்கம் அறிக்கை

கோட்டை, ஞாயிறு ''புதிதாகத் தயாரிக்கப்படவிருக்கும் அரசியலமைப்பு இலங்கை எங்கும் பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தை உறுதிப்படுத்தி தமிழினத்தைப் பூண்டோடு அழிக்க வழிவகுக்கும் முக்கிய குறிக்கோளை உடையதாயிருப்பதை இந்த அடிப்படைத் தீர்மானங்கள் மிக இலகுவில் புரிந்து கொள்ளக்கூடியவகையில் வெளிக்காட்டிவிட்டனர். குறிப்பாக தனிச்சிங்களமே அரசகருமமொழியாகவும், தனிச்சிங்களமே நாடெங்கும் நீதி நிர்வாக மொழியாகவும் ஆக்கப்பட்டுள்ளது. பௌத்த மதத்திற்கு அரசமத அந்தஸ்துகிடைக்க வழி வகுக்கப்பட்டிருக்கிறது.''

அரசாங்க எழுதுவினைஞர் சங்கச் செயற்குழு, அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சினால் அரசியல் நிர்ணயசபையின் வழிகாட்டு விஷயாலோசனைக்குழுவின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்துள்ள அடிப்படைத் தீர்மானங்கள் பற்றி விடுத்துள்ள பகிரங்க அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

''தமிழ் மக்கள் இந்நாட்டின் மீது ஆதிபத்திய உரிமை கொண்டாட முடியாத நிலை உருவாக்கப்பட்டு ஒற்றையாட்சியின் கீழ் ஒற்றைச் சட்ட மன்றத்தின் சிங்களப் பெரும்பான்மையினருக்கு நிரந்தரமான அடிமை வாழ்வை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்த புதிய அரசமைப்பில் வழி வகுக்கப்பட்டிருக்கிறது'' அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அறிக்கை மேலும் தெரிவிப்பதாவது:

''தேசிய மன்றம் என அழைக்கப்படும் சட்ட மன்றத்தின் சட்டங்களை ஒரு குடிமகன் சட்டரீதியாகச் சோதிக்கமுடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் சிங்களவர் ஆக்கக்கூடிய தமிழ்-தமிழர் ஒழிப்பு சட்டங்கள் உட்பட எல்லாச் சட்டங்களுக்கும் தமிழ் மக்கள் கட்டுப்பட வேண்டிய நிலை உருவாக்க வழிவகுக்கப்பட்டுள்ளது.

''ஈழத்தமிழினத்தை பூண்டோடு அழித்து இலங்கையை ஒரு தனிப்பௌத்த சிங்களக்குடியரசாக்குவது அரசினரின் நோக்கங்களில் முக்கியமானது என்பது தெளிவாகி விட்டதால் அரசியல் நிர்ணய சபையில் தமிழர்கள் பங்கு பற்றுவது தமிழ் மக்களுக்கு ஆபத்தானது. புதிய அரசியலமைப்பை எதிர்க்க தமிழர்களுக்கிருக்கக்கூடிய தார்மீகப் பலத்தையும் அது தகர்த்துவிடும்.

எமது சங்கத்தின்ஒன்பதாவது ஆண்டுக் கூட்டத்தில் புதிய அரசியலமைப்பில் தமிழர்களுக்குப் போதிய பாதுகாப்புக் கிடையாவிடின் அவர்கள் அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரிக்கவேண்டுமென நாம் ஒரு மனதாக நிறைவேற்றிய தீர்மானத்தை தமிழ் மக்களுக்கு நினைவுறுத்தி புதிய அரசியலமைப்பு தமிழர் அழிவுக்கே வழிவகுக்கும் என்பது தெளிவாகி விட்டபடியால் அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகிக்கும் தமிழர்களைத் தொடர்ந்தும் அச்சபையில் அங்கம் வகியாது சபையை பகிஷ்கரிக்கவேண்டுமென தமிழ் பொதுமக்கள் கோர வேண்டுமென தமிழ் மக்களை அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் வேண்டுகிறது.

......

## பகிரங்க சொற்பொழிவு

யாழ்ப்பாணம், திங்கள் தொழிற் சங்கங்களும், தொழிலாளர் உரிமைகளும் என்ற விடயம்பற்றி யாழ் தொழில் உதவியாணையாளர் திரு. க. சச்சிதானந்தம், யாழ் நகரமண்டபத்தில் நாளை மாலை பகிரங்க சொற்பொழிவாற்றுவார்.

லங்கா தொழிற் சங்கங்களின்சம்மேளனத்தின் யாழ். கிளைசார்பில் இக் கூட்டம் நடைபெறும். திரு. அ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் திருவாளர்கள் திரு. வ. பொன்னம்பலம், சி. நடராசா, எஸ். செல்வராசா, எஸ். விஜயானந்தன், ஆர். ஆர். பூபாலசிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்துவார்கள்.

(கா. நி.)

## மிதிபலகைப் பிரயாணம் தடை

கோட்டை, ஞாயிறு பிரயாணிகள் பஸ்ஸின் மிதிபலகையில் நின்று பிரயாணம் செய்யக்கூடாதென தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை மார்ச் மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுல் நடத்தப்படும்.

இத்தடையை மீறிப் பிரயாணம் செய்வோரைப் பொலிசார் கைதுசெய்து வழக்குத் தொடருவர்.

## ...னுதார் தருந்த காரணங்களை ...தெரிவிக்கத் தவறிவிட்டார்'

### ...ரசியலமைப்புச்சபை றிட்மனு தீர்ப்பின் விபரம்

கோட்டை, ஞாயிறு ...லமைப்புச் சபை ...ரோதமானது என் ...சபையில் எடுக்கப் ...டிவுகளைத் தடை ... அச்சபை செல்லு ...தென உத்தர ...யும் கோரி முன் ...வனியா எம் பி. ...லி. சுந்தரலிங்கம் ... செய்த மனுவை ...ன செய்த நீதியர ...ுதைத் தள்ளுபடி ...தற்குரிய கார ... நேற்று முன்தினம் ...த்தார்.

...னுவை நிராகரித்த ... காரணங்களை ... நீதியரசர் திரு. ... ரி. பெர்னாண்டோ ...ட்டார். அதன் விப ...மாறு:

...ரான திரு. சுந்தர ... பிரதிவாதிகள்மீது ...ஸ் பிறப்பிக்கவேண் ...று கோரியதற்குரிய ... காரணங்களைத் ...கத் தவறிவிட்

அரசியல் நிர்ணயசபை செயற்பட்டுப் புதிய அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்கினால் அதன் மூலம் தனது உரிமைகளுக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம் ஏற்படுமென மனுதார் தெரிவித்துள்ளார். புதிய அரசியல் அமைப்புத் திட்டம் செயல்முறைக்கு வந்த பின்னரே அது ஒருவரின் உரிமைகளையோ, சுகங்களையோ பாதிக்கிறதாவெனப் பரிசீலனை செய்ய முடியும்.

மனுதார் இம்மனு விசாரணையின்போது சமர்ப்பித்த காரணங்கள் மூலம் அவர் தற்போது அனுபவித்து வரும் உரிமைகளையோ சுகங்களையோ இந்த அரசியலமைப்புச்சபை பாதிப்பதாகத் தெரியவில்லை. பிரிவுக் கவுன்சிலுக்கு அப்பீல் செய்யும் உரிமை பாதிக்கப்படும் என மனுதார் கூறியிருக்கிறார்.

ஆனால் விசாரணை முடிவடைந்த இவரின் மனு நிராகரிக்கப்பட்டதும் இதற்கான காரணங்களைத் தெரிவிக்கும்படியும், பிரிவுக் கவுன்சிலுக்கு அப்பீல் செய்யப்போவதாகவும் மனுதார் கூறினார். எனவே இவரது உரிமைகள் பாதிக்கப்படுவதாகக் கூற முடியாது.

இந்த அரசியல் நிர்ணய சபை ஆட்சிமன்ற அங்கத்தவர்களால் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்திலேயே நிறைவேற்றப்பட்டது. இதைத் தடை செய்வதற்கு எந்தவொரு நீதிமன்றத்துக்கும் அதிகாரமுள்ளதாகத் தெரியவில்லை. இவ்வாறு எந்த நாட்டிலாவது நடைபெற்றதாகத் தெரியவில்லை.

திரு. வி. சுந்தரலிங்கம் அரசியல் நிர்ணயசபைக்கு எதிராகத் தாக்கல் செய்த றிட் மனுவை நீதியரசர் முன்னர் நிராகரித்து அதற்கான காரணங்களைப் பின்னர் தெரிவிப்பதாகக் கூறியிருந்தது தெரிந்ததே.

## ஆசிரியருக்கு கடிதங்கள்

### ''மாணவர் சமுதாயம் விம்முகிறது''

திரு. நமசிவாயம் எட்வேர்ட்ஜெயசிங்கம் 1947-ம் ஆண்டு பரியோவான் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார்; இருபத்திநான்கு வருட சேவை; மாணவர்களுடன் மிக்க கண்டிப்புடன் பழகும் அவருடைய மனம் கனிவானது என்பதை அவரிடம் கல்வி கற்கும் பாக்கியத்தைப் பெற்ற அனைவருமே உணர்ந்திருப்பர்.

விளையாட்டுத்துறை தொட்டுக் கல்லூரி விடுதி மாணவர் சங்க இயங்கங்கள் வரை எங்கும் பிரிவற்று மாணவர்களுடன் பழகிய வர் திரு. ஜெயசிங்கம். மாணவர்கள்தான் ''வருங்காலத் தலைவர்கள்!'' என்று அடிக்கடி சொல்லுவார். அவருடைய சொற்கள் அவருடைய ஆழமான உள்ளத்திலிருந்து வெளிவருபவை.

விடுதி மாணவர் சங்க உப-காப்பாளர், ஹண்டி இல்ல ஆசிரியர், முன்னாள் வட மாகாண ஆசிரியர்சங்க செயலாளர், பரியோவான் கல்லூரி இடைத்தர வகுப்புகளின் பொறுப்பதிபர் - இத்தனை பொறுப்புகளும் அந்த நல்ல மனிதரின் தலையில் சுமையாகக் கிடந்தன!

அவரைப் பொறுத்தவரையில் ''கெட்ட மாணவன்'' என்று எவருமே இல்லை; ஒவ்வொரு மாணவனுடைய செயலையும் அவர் நெருங்கி, அவனுடன் மனோதத்துவ ரீதியல் பழகி அவர்களைச் சரியான பாதையில் நடத்துவதில் அவருக்கு நிகரானவர் இன்னொருவர் இருப்பாரென்று நம்மால் நினைக்க முடியவில்லை.

அவருடைய பிரிவை எண்ணி ஓர் உலகம் குறிப்பாக மாணவ உலகம்—விம்முகிறது! மனைவியையும் மூன்று புதல்வர்களையும் மட்டுமல்ல ஒரு தொகை மாணவர்களையுமே அவர் விட்டுச் சென்றுள்ளார்!

இந்தப் பிரிவுத்துயரத்தை அவருடைய இறுதிச்சடங்குகளின் போது நெஞ்சம் கலங்க விம்மிய ஆசிரியமாணவர் கூட்டத்தைக் கண்டவர்கள் உணர்ந்திருப்பார்கள். ஜெயசிங்கம் மாஸ்டர் மறைந்தார் என்றால் அது பொய்! அவர் இன்றும் வாழ்கிறார்— எஞ்சியவர் நெஞ்சில்.

ஆர். சிவராஜன்

0 0 0
0 0 0

### கண்காட்சிக்கு பாராட்டு

அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிமன்ற இலங்கைக் கிளையினரால் ஒழுங்கு செய்யப்பட்டு கொழும்பில் நடாத்தப்பட்ட தற்காலத் தமிழ் நூல் காட்சி ஓர் உன்னத ஏற்பாடாகும்.

ஓர் இனத்தின் கலை, கலாச்சாரம் அவ்வினத்தின்மொழி ஒன்றில் மட்டும் தங்கியுள்ளதல்ல! வாழ்க்கைச் சூழல் பொருளாதார நிலை என்பனவும் அவற்றின் ஜீவாதார அம்சங்களாக அமைந்துள்ளன. இதற்கு ஒப்ப இலங்கைத் தமிழ் நூல்களையே முறைமுழுதாகக் கொண்டு ஆற்றப்பட்ட இம்முயற்சி பாராட்டப்பட வேண்டும்.

இலங்கைக்கென்று தனித்துவமான கலை கலாச்சாரம் பாரம்பரியம் உண்டு என்பதை அடிநாதமாகக் கொண்டுள்ள இக்காட்சி, ஈழத்துத் தமிழ் இலக்கியம் இன்றைய சிருஷ்டி கர்த்தாக்களால் எந்தளவிற்குமுன்னெடுத்துச் செல்லப்பட்டு வளம் படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியத் தருவதோடு நமது தேசிய இலக்கிய பாரம் பரியத்தை மேன்மேலும் செழுமைப் படுத்தி வளர்த்தெடுப்பதற்கு வழிவகுத்துள்ளது.

சுவைஞர்களினதும் சிருஷ்டி கர்த்தாக்களினதும் உணர்வையும் சிந்தனையையும் கிளறித் தூண்டி விடக்கூடிய இம்முயற்சிக்குத் திறனாய்வுக் கழகம் தனது ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிக்க முன்வந்துள்ளது.

யாழ். நகரதிலும் இக்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படும் என்னும் நம்பிக்கையோடு நூல்காட்சி அமைப்பாளர்களுக்கும் ஒத்தாசை புரிந்தோருக்கும் பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் இக்கழகம் பெருமைப் படுகின்றது.

எஸ். எஸ். செல்வநாயகம்
பொதுக்காரியதரிசி
திறனாய்வுக் கழகம்
யாழ்ப்பாணம்.

# கந்தானை மதகுரு கடத்தல் வழக்கு

## 23பேரும் பிணையில் செல்ல அனுமதி

கோட்டை ஞாயிறு

கந்தானை கத்தோலிக்கமத குரு சம்பந்தமாக எழுந்த இரண்டு வழக்குகளிலும் சம்பந்தப்பட்ட 23 எதிரிகளும் தலா 500 ரூபா பிணையிற் செல்லநீர்கொழும்பு மாஜிஸ்திரேட்டால் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு உதவி பொலிஸ் சுப்பிரீண்டன்ட் திரு. எச். ஜீ. குணவர்த்தன கந்தானை உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சி. எவ். பெர்னண்டோ ஆகியோர் எதிரிகளை கோர்ட்டில் ஆஜர்செய்தனர்.

நீர்கொழும்புகத்தோலிக்க மத டத்துக்குட்பட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட ஏராளமான மக்கள் எதிரிகளை பார்ப்பதற்காக நீதிமன்றத்தைச் சுற்றிலும் சூழ்ந்திருந்தனர்.

பலத்த பாதுகாவலுடன் எதிரிகள் எல்லோரும் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டனர். சனநெரிச்சலை சமாளிப்பதற்காக மேற்கொண்டும் வேறுபகுதிகளிலிருந்தும் வரவழைக்கப்பட்டனர்.

மாணவரிடையே

# எந்த மொழியையும் திணிக்க மாட்டோம்

## கோப்பாயில் பதில் கல்வி அமைச்சர்

கோப்பாய், ஞாயிறு

"வடக்குத் தெற்குப் பகுதிகளிலுள்ள வகுப்புவாத அரசியல் தலைவர்களினால் மக்கள் மத்தியில் எழுந்துள்ள ஐயப்பாடுகள் நீங்கவும் இந்நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தீரவும் சிங்களப் பிள்ளைகள் தமிழும் தமிழ்ப் பிள்ளைகள் சிங்களமும் படிக்க வேண்டும். ஆனால் சிங்கள மாணவர் மீதோ தமிழ் மாணவர் மீதோ இது திணிக்கப்படமாட்டாது. அவர்கள் விரும்பினால் எமது அரசாங்கம் அதற்கான உதவியைச் செய்ய முன்வரும்.

இவ்வாறு பதில் கல்வி அமைச்சர் திரு. பி. வை. துடாவை கோப்பாயில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் கூறினார்.

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையில் சிதம்பரப்பிள்ளை அரங்கை அமைச்சர் திறந்து வைத்தார். இவ்விழா வித்தியாசாலை அதிபர் திரு. சி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தற்கால கல்வித் திட்டத்தை மாற்றி சோஷலிஸ அடிப்படையில் புதியதொரு மாறுதலை அரசாங்கம் செய்ய முன்வந்துள்ளது. அரசியல் குரோதங்களை மறந்து தமிழ்மக்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க முன்வருதல் அவசியமென்றும் அமைச்சர் மேலும் பேசுகையில் கூறினார்.

## ரூபா 300 அபராதம்

மாவிட்டபுரம், ஞாயிறு

வடிசாராயத்தை சட்டவிரோதமாக காரில் கடத்திச் சென்ற ஒருவருக்கு மல்லாகம் நீதிபதி 300 ரூபா அபராதம் விதித்தார்.

உரும்பிராயில் இருந்து கைதடிக்கு வடிசாரம் கடத்திச் சென்றதாக எம். சிவரத்தினம் என்பவரைக் கைதுசெய்து சுன்னாகம் பொலிசார் இவ் வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

## மோசடி வழக்கு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

மானிப்பாய் கூழாவடியைச்சேர்ந்த எஸ். சண்முகலிங்கம் என்பவர் கிளிநொச்சி சிங்கர்மெசின் கம்பனியில் வேலைசெய்த சமயம் 6000 ரூபாவை மோசடிசெய்ததாக குற்றம் சாட்டி கிளிநொச்சி நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டிருந்த வழக்கை விசாரணைசெய்த நீதிபதி வழக்கை மார்ச்மாதம் 26-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## அரிசிவாங்கி மோசடி செய்தாராம்

மாவிட்டபுரம், ஞாயிறு

புன்னாலைக்கட்டுவனைச்சேர்ந்த "இராஜன்மில்" சொந்தக்காரரான ச. இராசரத்தினம் என்பவரிடம் இருந்து 122 மூட்டை அரிசியை பெற்று அதன் பெறுமதியான 10,126 ரூபா பணத்தை செலுத்தாது மோசடி செய்ததாகக் குற்றம்சாட்டி கண்டி வட்டப்பளையை சேர்ந்த ஏ. ஈ. வீரசிங்கா என்பவர் மீது இவ் வழக்கு தொடரப்பட்டிருந்தது வழக்கை விசாரணை செய்த மல்லாகம் நீதிபதி எஸ். ஆனந்தகுமாரசாமி மாவட்ட நீதிமன்றத்துக்கு இவ் வழக்கை பாரப்படுத்தியுள்ளார்.

காங்கேசன் துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். செல்லையா இவ் வழக்கை நடத்தினர்.

## ஏற்பாடு

அராலி, ஞாயிறு

கூட்டுறவு மறுசீர் அமைக்கும் திட்டத்தின்கீழ் சங்கானை ப. ச., மானிப்பாய் ப. ச., வட்டுக்கோட்டை கி. ச., அராலி கி. ச., சுளிபுரம் கி. ச. அடங்கிய பிரதேசங்களுக்கு ஓர் ஆரம்ப ப நோ கூ சங்கம் சங்கானையில் பதிவுசெய்யும் நோக்கமாக ஆராய இம்மாதம் 16-ந் திகதி வலிமேற்கு ப நோ கூ ச சமாச மண்டபத்தில் யாழ். கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டுறவுப் பகுதியினர் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

## பழையமாணவர் சங்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

நாவலர் மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் மூன்றாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: பண்டிதமணி வித்துவான் திரு. ந. சுப்பையாபிள்ளை தலைவர்: திரு நா. வேலுப்பிள்ளை (அதிபர்) உபதலைவர்; திரு. வை. சரவணமுத்து, திரு. ரேவதி குப்புஸ்வாமி, செயலாளர்: வ. கந்தசாமி, உபசெயலாளர்: திரு. க. இராமசாமி, பொருளாளர் திரு. எஸ். ஏ. மாரிமுத்து, உபபொருளாளர்: திரு சு. ஏகாம்பரம், கணக்குப்பரிசோதகர்: திரு. சு. பாலசுப்பிரமணியம், 15 நிர்வாக சபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# இன்றைய பலன்

மாசி மாதம் 3-ந் திகதி (15-2-71)

மேஷம்- தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும் களஸ்திரவழியில் பொருள் வரவுக்கு இடமுண்டு.

ரிஷபம்- தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம். வேண்டாத விவாதங்களால் வீண்பெயர் கேட்க நேரிடும்.

மிதுனம்- எதிர்பாராத பணமுடை ஏற்படும். கடன் தொல்லைகளால் கஷ்டப்படுவீர்கள். தொழில்துறையில் தொல்லைகள் தோன்றிமறையும்.

கடகம்- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும் எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள். கலைஞர்களுக்கு நல்லதினம்.

சிம்மம்- பொதுப்பணிகளில் ஈடுபடவிரும்புவீர்கள். குறிப்பாக அரசியல்வாதிகளுக்குப் புதிய ஆர்வம் பிறக்கலாம்

கன்னி- வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும். சுற்றுடலில் உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும். இன்று பொன்னான தினம்.

துலாம்- இனிக்கப் பேசுவோர் விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும்: பிறந்தகத்தின் நினைவு திடீரென தலைதூக்கும்.

விருச்சிகம்- முன்னாள் ஆசிரியர் ஒருவர் உமது முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவார். பூமியால் லாபமுண்டு. புத்திரர் புகழுமுண்டு.

தனுசு- இனிமையின் அழைப்பு உங்களுக்குக் கிடைக்கும். இல்லம் பல் கலைக்கழகமாக மாறும்.

மகரம்- மகிழ்ச்சிகரமான தினம். குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்பு ஏற்படும்.

கும்பம்- நல்லதைச் செய்வீர்கள். நலன் பெருகும் பிரமுகர்கள் உங்களைத் தேடிவருவார்கள்.

மீனம்- வார்த்தை ஜாலம் செய்வதன்மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள். எழுத்தாளர்களுக்கும் சிறப்பான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## பூசகர்கள் பிரச்னை

### ஆலயக்கதவு பூட்டு

மாவிட்டபுரம், ஞாயிறு

பூசகர்களுக்கிடையே ஏற்பட்ட சச்சரவு காரணத்தினால் கதவு பூட்டப்பட்டு பூசைகள் நிறுத்தப்பட்டிருக்கும் நையிட்டி கலையவிற் பிள்ளையார்கோவில் கதவுகளை திறக்க உதவும்படி கலாச்சார அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலகாவை இவ்வூர் மக்கள் ஓர் மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

வடபகுதி

# நீரியல் ஆராய்ச்சியில் கண்டி மாணவர்கள்

பருத்தித்துறை, ஞாயிறு

இம்மாதம் 15-ம் 16-ம் திகதிகளில் வல்லை, நாகர் கோவில், தொண்டைமானாறு, மருதங்கேணி ஆகிய இடங்களில் நடக்கவிருக்கும் உயிரியல் ஆராய்ச்சிகளில் முதற்தடவையாகக் கண்டிப் பகுதிப் பாடசாலைகளைச் சேர்ந்த விஞ்ஞானப் பகுதி ஆசிரியரும் மாணவரும் கலந்துகொள்ளவிருப்பதாகத் தெரிகிறது

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளும் இன்று பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடந்த விஞ்ஞான ஆசிரியர் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டன, வடமாநில கல்வியதிபதி திரு. டபிள்யூ. டீ. சீ. மகாதந்தில உட்படச் சகல கல்விஉயரதிகாரிகளும் இதற்கு ஆதரவும் உற்சாகமும் அளிப்பதாக வட பகுதி விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு. எம். அற்புதநாதன் கூறினர்:

# கிளிநொச்சித் தொகுதியில் கல்வி பாதிப்பு

பூநகரி, ஞாயிறு

கிளிநொச்சித் தொகுதியில் பத்துக்கு மேற்பட்ட பாடசாலைகள் இயங்காமல் மூடப்பட்டுக் கிடக்கின்றன. சில பாடசாலைகள் இடையிடையே திறக்கப்படுகின்றனவாம். ஆசிரியர் பற்றாக்குறையே, இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது

ஐந்துக்கு மேற்பட்ட பாடசாலைகளில் ஒரு ஆசிரியர் மட்டும் கடமைபுரிவதால் அவர் லீவு எடுத்தவுடன் பாடசாலை மூடப்படுகின்றது. மற்றப் பாடசாலைகளில் ஆசிரியரே இல்லை எனத் தெரிகின்றது. பூநகரிப் பகுதியில் மட்டும் நான்கு பாடசாலைகள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன. இதனால் பிள்ளைகளின் கல்வி பாழாகின்றதே என்று பெற்றோர் மிக கவலையடைந்துள்ளனர். இதுபற்றிக் கல்வி அதிபதியுடன் தொடர்பு கொண்டு வற்புறுத்தியபோது ஆசிரியர் இல்லையெனவும், ஆசிரியர் இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டதாகவும், விரைவில் ஏதோ தம்மால் இயன்ற ஆசிரியர்களைப் பெற்றுத் தருவதாகவும் தம்மைப் பேட்டிகண்ட பூநகரி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க தூதுகுழுவிடம் தெரிவித்துள்ளார்.

## ஆசிரிய நல்லுறவு மன்றம்

உடுவில் ஞாயிறு

மானிப்பாய் மெமோரியல் மகளிர் வித்தியாலய ஆசிரிய நல்லுறவு மன்றக்கூட்டம் பதில் அதிபர் திரு. ஞானசிகாமணி அன்னப்பா தலைமையில் நடைபெற்ற போது புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வே சின்னத்துரை, செயலாளர்: திரு ஏ. மனோகரன், தனதிகாரி: செல்வி எஸ். தில்லையம்பலம், கணக்குப் பரிசோதனையாளர்: திரு. வி. பரிபூரணானந்தசர்மா.

## பாராட்டு விழா

ஊரதீவு, ஞாயிறு

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி கனிஷ்ட வித்தியாசாலையில் கடந்த பல வருடங்களாகக் கடமையாற்றி கொட்டடி நமசிவாய வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள திருமதி கனகம்மா குமாரசாமிக்கும் இங்கு கடமையாற்றி இளைப்பாறிய ஆசிரியர் திரு. வி. கந்தையாவுக்கும் இப்பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் சேர்ந்து பாராட்டு உபசாரம் ஒன்றை நடத்தினர்.

புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி வித்தியாசாலையில் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள திரு சி. சின்னத்துரை ஆசிரியருக்கு பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் இணைந்து பாராட்டுவிழா ஒன்றை நடத்தினர்.

## தெரிவு செய்யப்பட்டனர்

பச்சிலைப்பள்ளி ஞாயிறு

தாளையடி மீன்பிடிப் பரிசோதகர் திரு எஸ் நவரத்தினம் பருத்தித்துறை மீன்பிடிப் பரிசோதகர் திரு. எஸ் திருநாவுக்கரசு வடபகுதி மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களின் பரிசோதகர் திரு. பி இராமநாதன் ஆகியோர் டீசல் எஞ்சின் பற்றிப் பயிற்சி பெறுவதற்கு அரசாங்கத்தால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இம்மாதம் 16-ம் திகதி தொடக்கம் நீர்கொழும்பிலுள்ள மீன்பிடிப் பயிற்சி நிலையத்தில் மூன்றரை மாதப் பயிற்சியைப் பெறுவர்

## நினைவு தினம்

கொழும்பு, திங்கள்

இன்று ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது தலைவரான ஜோர்ஜ் வாஷிங்டனின் பிறந்தநாளாகும். இதையொட்டி இன்று கொழும்பு, கண்டியிலுள்ள அமெரிக்க தூதுவரகமும், ஐக்கிய அமெரிக்க தகவல் சேவையும், மற்றும் அமெரிக்க நிலையங்களும் மூடப்பட்டிருக்கும்.

NIKONA SALES

நிகோந ஏல
விற்பனை நிலையம்
2வது மாடி, சங்கரப்பிள்ளை கட்டிடம்
யாழ்ப்பாணத்தின் புதிய ஒரே ஒரு ஏல விற்பனை நிலையம்
இப்பொழுது விற்பனைக்குண்டு
* குழந்தைகளின் தொட்டில்கள்
* காரியாலய, சாப்பாட்டு மேசைகள்
* கட்டறி செற்றுகள்
* தேநீர் எடுத்துச் செல்லும் உபகரணங்கள்
* குளிர் சாதனப் பெட்டிகள்
மற்றும்
* அலங்காரப் பொருட்கள்

போலந்தில்

# உப ஜனாதிபதி உட்பட பலர் பதவி நீக்கம்

வார்சோ, பெப். 14 போலந்து நாட்டின் உதவி ஜனாதிபதி ஒருவர் உட்பட தலைமைப் பொறுப்புள்ள பலர் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட உணவு விலைவாசி உயர்வுக்கும் அதனால் போலந்தில் ஏற்பட்ட ஆர்ப்பாட்டங்களுக்கும் இவர்களே காரணமென முன்பு புதிய தலைவர் திரு. கிரேக் அறிவித்தது குறிப்பிடத்தக்கது. இதனையொட்டி கட்சித் தலைமைக் காரியதரிசிப் பதவியிலிருந்து திரு. கொமுல்கா விலக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து இப்பொழுது உதவி ஜனாதிபதி திரு. மைன்கி உட்பட இரு உதவிப் பிரதமர்களும் சபாநாயகரும் உணவு அமைச்சரும் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள்.

## பாலர் பாடசாலைகளை அரசு எடுக்கவேண்டும்

கோட்டை, ஞாயிறு
கொழும்பிலுள்ள சகல 'மொன்டிசறி' பாடசாலைகளையும் கொழும்பு மாநகர சபை கவுன்சில் பொறுப்பேற்கவேண்டுமென்ற பிரேரணை ஒன்றை நாளை நடைபெறவிருக்கும் மாநகர சபைக்கூட்டத்தில் திரு ஆனந்தா பிரேமசிங்கா கொண்டுவரவிருக்கிறார்.

......

## வடக்கு — கிழக்கு பகுதிகளுக்கு மேலதிக ரயில்

கோட்டை, ஞாயிறு
வடக்கு, கிழக்குப் பகுதிகளில் புகையிரதப் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்க்க மேலதிகமாக ரயில்கள் சேவைக்கு விடப்படும் என புகையிரதப் பகுதி ஜெனரல் மனேஜர் திரு வி. ரி. நவரத்ன தெரிவித்துள்ளார்.

நாளுக்கு நாள் வடக்குக் கிழக்கு பகுதிகளுக்குப் பிரயாணம் செய்பவர்களின் தொகை அதிகரித்து வந்தபோதிலும் ரயில்கள் அதிகரிக்கப்படாமையினால் பிரயாணிகள் பெரும் கஷ்டம் அடைகின்றனர். மேலதிக ரயில்சேவை ஆரம்பிப்பதுடன் முக்கிய வைபவங்கள், தினங்கள், பெருநாட்களை முன்னிட்டு விசேட சேவை நடத்துவது பற்றியும் கவனம் செலுத்தப்படும் என்றும் திரு. நவரத்ன கூறினார்.

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 15—2—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 பாட்டு.

இரவு 6-15 நாட்டுப்பாடல்கள், 6-30 கூட்டுறவு நிகழ்ச்சி, 6-45 விவசாயப்பாடல்கள், 7-00 மெல்லிசை, 7-15 நாடகம், 7-45 வாத்தியஇசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 சித்திரம், 10-00 நேயர்விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.

## 'தியாகத்தின் மூலமே விடுதலை பெறலாம்'

பருத்தித்துறை, ஞாயிறு
'தியாகத்தின் மூலமே ஒடுக்கப்பட்ட ஒரு வர்க்கம் விடுதலையையும் சுபீட்ச வாழ்வையும் பெறலாம். என்னும் உண்மையை ஒவ்வொரு நாட்டின் வரலாறும் எடுத்துக் காட்டுகிறது. போர்த்துக்கீச ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் அங்கோலா மக்களின் புரட்சிகரப் போராட்டமும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் வியட்னாம் வீரரின் உள்ளக் குமுறலும் இதையே எடுத்துக் காட்டுகின்றன'

இவ்வாறு கன்பொல்லை போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளின் நினைவு அஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசிய திரு. வீ. ஏ கந்தசாமி கூறினார்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க வடமராட்சிக் கிளையின் ஆதரவில் கன்பொல்லை சனசமூக நிலைய முன்றலில் நடந்த இக் கூட்டத்தில் திருவாளர்கள் கே. டானியல், செந்தில்நாதன் உட்படப்பலர் உரை நிகழ்த்தினர்.

......

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு
இம்மாதம் 16-ம் திகதி மாலை 4-30 மணிக்குவண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் 'சாத்திரமும் தோத்திரமும்' என்னும் பொருள் பற்றி திரு. மு சதாசிவம் ஆய்வுச் சொற்பொழிவு நிகழ்த்துவார் இதனை யாழ்ப்பாணம் மெய்கண்டார் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

......

## நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ் மாநகரசபையின் இரண்டாம் வட்டார உறுப்பினரும் பிரபல வர்த்தகப் பிரமுகருமான திரு. எம். எஸ் பேரின்பநாயகம் யாழ். பெரியாஸ்பத்திரி மேற்பார்வைச் சபை உறுப்பினராகச் சுகாதார அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார் (உடுப் நி)

## ச. ச. நிலைய நிர்வாகிகள்

அல்லைப்பிட்டி, ஞாயிறு
வேலணை ஐக்கிய உதயமால் ஜனசமூகநிலைய புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திருவாளர்கள் கா இராஜதுரை, கே வி கே. ஜெயசந்திரமூர்த்தி தலைவர்: கை பாலசுப்பிரமணியம், துணைத் தலைவர் திரு க திருலோகமூர்த்தி செயலாளர் திரு ஐ சிவராசா, துணைச் செயலாளர் திரு கே. பாலசுந்தரம். பொருளாளர்: திரு செ. இராசசிங்கம்.

0 0

அல்லைப்பிட்டி, ஞாயிறு
தீவுப்பகுதியில் இம்முறை அநேகம் வாலிபர்கள் மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

......

## அராலிக் கிராம அபிவிருத்திசபை மகஜர்

அராலி, ஞாயிறு
இம்மாதம் 16ந் திகதி யாழ் மாவட்ட அரசாங்க அதிபரால் ஆரம்பித்து வைக்கப்படும் அராலிக் கிராமாபிவிருத்தி சபைக்கு சமர்ப்பிப்பதற்கென அராலி தெற்கு கிழக்கு பயிர்ச் செய்கைக் குழுவினர் சில விவசாய அபிவிருத்தி வேலைகளுக்கு திட்டங்கள் தயாரித்திருக்கிறார்கள்.

இப்பயிர்ச்செய்கைக் குழுவின் எல்லைக்குள்ளிருக்கும் செய்கை பண்ணப்படாத அல்லது நவீன முறைகளைக் கையாண்டு பயிரிடப்படாத சில ஏக்கர் நிலங்களை எடுத்து பயிரிடுதல்; நவீன உழவு இயந்திரங்கள். தெளி-தூவு கருவிகள் நீரிறைப்பிகள் உரம், நாசினிகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்துவிவசாயிகளுக்கு வழங்குதல்கூட்டெருத்தொட்டிகள் அமைத்தல், உரக்களஞ்சியம் நெற் களஞ்சியங்கள் அமைத்தல், வருடந்தோறும் ஒரு ஏக்கர் விஸ்தீரணமான கற்பாறை மேட்டு நிலங்களிலுள்ள பாறைகளை உடைத்து நெல்வயல்களாக்குதல் செயற்படாது தூர்ந்து கிடக்கும் கிணறுகள் குளங்களைப் பதித்து மழைநீரைத் தேக்குதல் போன்ற வேலைகளைச் செய்வதற்கு அபிவிருத்திச் சபையிடமிருந்து கடன் பெறுவதென இக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## சிவராத்திரி விழா

கோப்பாய், ஞாயிறு
கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலில் மகாசிவராத்திரி விழா இம்மாதம் 23-ம் திகதி நடைபெறும்.

# 'மனிதனை முழுமையாக்குவதே கல்வியின் நோக்கம்'

பதுளை, ஞாயிறு
உடலும் உயிரும் கொண்ட பகுத்தறிவு படைத்த உயிரினமே மனிதன் என்று தத்துவார்த்த முறையில் வரையறுத்துள்ளனர். அவனது உயர் ஆத்மீகம், சுதந்திரம், ஞாபகம் ஆகிய மூன்றுமே வளர்ப்பது கல்வியின் பயனே இந்த ஆத்மீக வளர்ச்சி. இந்த வளர்ச்சியை குழந்தையிலிருந்தே நாம் வளர்க்க வேண்டும்.

பதுளை வை. எம். பி. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில், வண. பிதா றுச்சாட் அன்ரனி பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், பலதரப்பட்ட வாழ்க்கை உடைய மக்கள் பலவகையில் கல்வியின் பயனை நோக்குகின்றனர். மனிதன் எவ்வாறு வாழ வேண்டுமென்பதை கல்வி அறிவுறுத்துகிறது. இந்தக் கல்வியினால் சமயத்தின் உண்மையை அவன் அறிந்து தெளிந்து கொள்ளவேண்டும். இதுதான் கல்வியின் முதன்மையான நோக்கமாகும். இதன் இரண்டாவது நோக்கம் மனிதனை பொறுப்புள்ளவனாக்குவது. இன்றைய வாழ்க்கையை அவன் நோக்கி அதன் பலாபலன்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். அவன் தனது சமூகத்தில் ஒழுக்கமுள்ளவனாக சிறப்புறவேண்டும். தன் வாழ்வுக்குத்தானே உழைக்கும் வல்லமை உடையவனாய் இருக்கவேண்டும் என்றார்.

இலங்கைக் காட்சிகளை

# டெலிவிஷன்படம்பிடிப்பதில் போலந்து அக்கறை

கோட்டை, ஞாயிறு
பொருளாதார ரீதியில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் பற்றிய டெலிவிஷன் செய்திப்படம் ஒன்றைத் தயாரிக்க போலந்திலுள்ள நான்கு டெலிவிஷன் நிபுணர்கள் அடுத்த மாதம் இலங்கை வருகிறார்கள்.

இவர்கள் இலங்கையிலுள்ள தேயிலைத் தோட்டங்கள், காரீயச்சுரங்கங்கள், இரத்தினக்கல் சுரங்கங்கள், வனவிலங்குகள் முதலியன பற்றிய செய்திப்படங்களைத் தயாரிப்பார்கள். இச்செய்திப்படங்கள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில்காண்பிக்கப்படும். அத்துடன் இலங்கைக்கு வரும் உல்லாசப்பிரயாணிகள் இங்கு எத்தகைய காட்சிகளைக்கண்டு களிக்கலாம் என்பது பற்றிய வண்ணப்படம் ஒன்றும் தயாரிக்கப்படும். இந்த டெலிவிஷன்மூலம் இலங்கையைப் பற்றி நன்கு பிரச்சாரம் செய்ய இது உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தினால்இலங்கையில் டெலிவிஷன் நிலையம் அமைப்பதற்கு வசதியாயிருக்கும் என்றும் வெளிவிவகார பாதுகாப்பு அமைச்சு, தகவல்பகுதி ஆகியவற்றின் உதவியுடன் இத்திட்டம் அமுல் நடத்தப்படும் என்றும் தெரிய வருகிறது.

# 'பனாட்டிலிருந்து 'சொக்கலேட்' உற்பத்தி செய்யலாம்'

யாழ்ப்பாணம், செவ்வாய்
காணியைத் திருத்துவதற்காகவும் பனையை விற்று சொற்ப பணத்தை எடுப்பதற்காகவும் பனைகள் வீணாக அழிக்கப்படுகின்றன. பனம் பொருள் உற்பத்தியைப் பற்றிச் சிந்திக்கும் இவ்வேளையில் பனைகள் அழிக்கப்படுவதைத் தடுக்கவேண்டும். என்று பனம்பொருள் ஆராய்ச்சிக்குழுமுன் சாட்சியமளித்த மந்துவில் ப. நோ. கூ. சங்கச் செயலாளர் திரு. க. நடராசா கூறினார்.

10 வருடங்களுக்கு முன் மந்துவில் கிராமத்தில் 10,000 ரூபா செலவில் பதநீரிலிருந்து சீனிசெய்யும் தொழிற்சாலை ஒன்று அரசாங்கத்தின் உதவியுடன் நிறுவப்பட்டது. ஒருறுத்தல் சீனி உற்பத்திசெய்வதற்கு 3 ரூபா செலவாகியது. ஒருகலன் பதநீரிலிருந்து ஒரு றுத்தல் சீனிமட்டுமே உற்பத்தி செய்ய முடிந்தது. இதனால் அத்தொழிற்சாலையை மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நவீன விஞ்ஞான முறைகளைக் கையாண்டு, அரசாங்கம் இதில் கூடிய அக்கறைகாட்டினால் இதன் உற்பத்திச் செலவைக் குறைக்கமுடியும் என்று தெரிவித்த அவர் மேலும் சாட்சியமளிக்கையில், பனாட்டு தென்மராட்சியில் ஏராளமாக உற்பத்திசெய்யப்பட்டு வருகிறது 'சொக்கலேட்' போன்றவைகளை இதிலிருந்து தயாரிக்க முடியும் என்றும் கூறினார்.

# கல்விப்பகுதி திடீர் சோதனைக்குழு விஜயம்

பருத்தித்துறை, ஞாயிறு
கடந்த சில நாட்களாக கல்விப் பகுதியைச் சேர்ந்த 'பறக்கும் குழு' எனப்படும் திடீர் பரிசோதனைக் குழு பல பாடசாலைகளுக்கும் திடீர் விஜயம் செய்து வருகிறது. சில பாடசாலைகளில் ஆசிரியர், பாடக்குறிப்புகளோ, பாடப் பதிவேடுகளோ இன்றிக் காணப்பட்டனர். சில பாடசாலைகளில ஆசிரியரின்றி வகுப்புகள் சத்தமிட்டுக் கொண்டிருந்ததாகவும், பொதுவாகச் சகல பாடசாலைகளிலும் ஆசிரியர் வரவு குறைவாகக் காணப்பட்டதாகவும் தெரிகிறது.

அநேகமான பாடசாலைகள் பதிலதிபர்களின் கீழ் இயங்கிவருவதால் நிலைமை சீரடையப் பல நாட்கள் எடுக்கலாமெனச் சில பதிலதிபர்கள் சமாதானம் கூறியதாகவும் அறியக்கிடக்கிறது.

......

## ஜவுளிக் கூட்டுத்தாபனம்

கோட்டை, ஞாயிறு
ஸ்ரீலங்கா அரசாங்க வர்த்தக ஜவுளிக் கூட்டுத்தாபனம் என்ற பெயரில் புதிய அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனம் ஒன்று அடுத்த வாரம் திறக்கப்படவுள்ளது.

இக் கூட்டுத்தாபனம் பிரதான ஜவுளி இறக்குமதியான 'சலுசலா' வாகவே அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதுள்ள சலுசலாவின் பங்கில் 51 சதவிகிதம் அரசாங்கத்தினதும் 49 சதவிகிதம்பொது மக்களினதுமாகும். பொதுமக்களின் வசமுள்ள 49 சதவிகித பங்கை அரசாங்கம் அதன் உரிய விலைக்கு ஒவ்வொன்றும் 2 ரூபா விகிதம் கொள்வனவு செய்யும்

அடுத்த வாரம் முதல் சலுசலா நூற்றுக்கு நூறு விகித அரசாங்க கூட்டுத்தாபன விகிதமாக அமையும்.

## நாடகவிழா

அல்லைப்பிட்டி ஞாயிறு
எதிர்வரும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இம்மாதம் 23-ம் திகதி வேலணையில் ஓர் நாடகவிழா ஒன்று நடைபெறவிருக்கின்றது. இவ் விழாவில் வேலணை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரின் 'விடிவும் முடிவும்' என்னும் நாடகமும் துறையூர் ஐயனார் கலாமன்றத்தினரின் நல்லதீர்ப்பு என்னும் நாடகமும் இடம்பெற உள்ளன.

## 'நடவடிக்கை எடுக்கவும்'

பூநகரி, ஞாயிறு
பூநகரியிலுள்ள ஆரியம் பொந்து குடியேற்றத் திட்டத்தில் வாழும் மக்களுக்குத் தபால் விநியோகத்திற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு தந்தி மூலம் தபால் தந்தி அமைச்சரையும் கிளிநொச்சி ஆட்சி மன்ற உறுப்பினரையும் வடமாகாண தபால் அத்தியட்சகரையும் ஆரியம் பொந்து கி. மு. ச காரியதரிசி திரு இராசேந்திரம் கேட்டுள்ளார்.

## தட்டுப்பாடு

பச்சிலைப்பள்ளி, ஞாயிறு
இப்பகுதியிலுள்ள உபதபாற் கந்தோர்களில் கடித உறைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகின்றனர்.

# அரசாங்க அதிபரிடம் பதுக்கல் பற்றிய தகவல்களை நேராகத் தெரிவிக்கலாம்

கட்டியக் கோல் சபாநாயகர் ஆஸனம்

## பிரி. மக்கள் சபை வழங்கும் அன்பளிப்பு

லண்டன், பெப். 14

மொரிஸஸ் தீவுக்கு ஓர் கட்டியக்கோலையும், செயின்ட் வின்சன்ட் தீவுக்கு ஓர் பாராளுமன்ற நூலகத்லைதயும் பிரிட்டிஷ் மக்கள்சபை அன்பளிப்பாக வழங்கவிருக்கிறது. புதிதாக சுதந்திரம் பெற்று சாம்ராஜ்ய கட்டணியில் சேர்ந்துகொள்ளும் நாடுகளின் ஆட்சிமன்றங்களுக்கு மக்கள் சபை காலத்திற்கு காலம் அன்பளிப்புகளை வழங்கிவருவது தெரிந்ததே. மக்கள் சபையின் முதலாவது அன்பளிப்பாக 1949ம் ஆண்டு ஓர் சபாநாயகர் ஆசனமும், ஓர் கட்டியக் கோலும் இலங்கைக்கு வழங்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

1951ம் ஆண்டில் அவுஸ்திரேலியாவுக்கு ஓர் கட்டியக்கோலும், நியூஸிலாந்திற்கு ஓர் சபாநாயகர் ஆசனமும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இதனையடுத்து தேசிய சுதந்திரம் பெறும் நாடுகளுக்கு இத்தகைய அன்பளிப்புகளை வழங்குவது ஓர் சம்பிரதாயமாகியுள்ளது.

இந்த அன்பளிப்பு ஒரு தலைப்பட்சமானதல்ல. சாம்ராஜ்ய நாடுகளும் பிரிட்டிஷ் மக்கள் சபைக்கு அன்பளிப்புகளை வழங்கியுள்ளன. 1941ம் ஆண்டு பிரிட்டிஷ் மக்கள் சபைக் கட்டிடம் குண்டுவீச்சால் தகர்க்கப்பட்டதை அடுத்து நிறுவப்பட்ட புதிய கட்டிடத்திற்கு இத்தகைய நன்கொடைகளைச் சாம்ராஜ்ய நாடுகள் வழங்கியுள்ளன. மக்கள் சபை மண்டபத்தின் பிரமாண்டமான வாசற் கதவுகளை இந்தியாவும் பாகிஸ்தானும் கொடுத்துதவின. சபையின் பாதுகாப்பாளர் ஆசனத்தை இலங்கை அன்பளிப்புச் செய்தது. சபாநாயகரின் ஆசனத்தை அவுஸ்திரேலியா வழங்கியது.

சாம்ராஜ்ய நாடுகளுக்கு வழங்கப்படடுவரும் பிரிட்டிஷ் அன்பளிப்புகள் மக்கள் சபையில் உள்ளது போன்ற வெறும் மாதிரிப் படிவங்கள் அல்ல, இவை விசேஷமாக பிரிட்டிஷ் கைவினைஞர்களால் நுட்பமாக சிருஷ்டிக்கப்பட்ட பொருட்களாகும்.

1949ம் ஆண்டு இலங்கைக்கு முதலாவது அன்பளிப்பாக வழங்கப்பட்டதை அடுத்து கட்டியக் கோல்கள் 1962ல் சியாரா லியோனுக்கும், 1964ல் உகண்டாவுக்கு 1966ல் சபாவுக்கும் வழங்கப்பட்டன. சபாநாயகர் ஆசனங்கள் நைஜீரியா, கானா, தங்கானியா, மலாசியா, சரவாக், மாலவி, ஸாம்பியா, காம்பியா, சுவாஸிலாந்து ஆகிய நாடுகளுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட. சபை லிகிதர் மேஜை, நாற்காலிகள், சபைப் பாதுகாவலர் ஆசனங்கள், ஆட்சிமன்ற நூற் தொகுப்புகள் இப்படியான அன்பளிப்புகள் ஏனைய சாம்ராஜ்ய நாடுகளுக்கு காலத்திற்குக் காலம் வழங்கப்பட்டன.

## பொதுமக்களுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

**அத்தியாவசிய கட்டுப்பாட்டு விலைப்பொருட்களை பதுக்கிவைத்துக்கொண்டு விற்பனைக்கு இல்லை என்று கூறும் வியாபாரிகள் பற்றிய தகவல்களையும், விலையைக் கூட்டிவிற்பவர்கள் பற்றிய தகவல்களையும் நேரடியாக தமக்கு தெரிவிக்கும்படி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.**

வடபகுதியில் பொதுவாக சில பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், அவற்றைப் பெறுவதில் பொதுமக்கள் அதிக கஷ்டம் அனுபவிப்பதாகவும் கூறப்படும் புகாரைத் தொடர்ந்தே அரசாங்க அதிபர் இந்த வேண்டுகோளை நேற்று விடுத்தார்.

பொருட்களைப் பதுக்கி தட்டுப்பாடு நிலவும் வைத்திருக்கும் வியாபாரிகள் பற்றிய தகவல்களை இரகசியமாக தமக்கு நேரில் தெரிவிக்கும்படியும் இதன் மூலம் பொதுமக்கள் அனுபவித்துவரும் கஷ்டங்களை நிவர்த்திசெய்யலாம் என்றும் அரசாங்க அதிபர் தமது வேண்டுகோளில் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொருட்கள் எங்கிருக்கின்றன என்பதுபற்றிய தகவல் கிடைத்ததும், ஸ்தலத்துக்கு விரைந்துசென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இவ்விடயத்தில் பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் சொன்னார்.

## டெஸ்ட் கிரிக்கெட் இங். 229—4

சிட்னி, பெப். 14

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையில் சிட்னியில் நடைபெறும் 7-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3 வது நாளான இன்று ஆட்டம் முடியும்போது இங்கிலாந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் நாலு விக்கட் நஷ்டத்திற்கு 229 ஓட்டங்களை எடுத்தது.

இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் 184 ஓட்டங்களையும், ஆஸ்திரேலியா 264 ஓட்டங்களையும் எடுத்திருந்தன.

புத்தூர்ச்சந்தி

## மூதாட்டி கொலைவழக்கு

மட்டுவில், ஞாயிறு

"கிட்டிணு என்னடா வந்தாய் என்று இறந்தவர் எதிரியைக் கேட்டார். நான இரவைக்கு இஞ்சைதான் படுக்கப்போறன். ஒரு பாய் காணை ஆச்சி' என்று எதிரி கேட்க இறந்தவர் ஒரு பாயைக் காட்ட எதிரி எடுத்துப்போட்டுக்கொண்டு படுத்தார்"

இவ்வாறு தென்மராட்சியில் பெரித்த பரபரப்பை ஏற்படுத்திய புத்தூர்ச்சந்தி மூதாட்டி கொலைவழக்கில் சாட்சியமளித்த இறந்தவரின் மகனின் மாமியாரான பார்வதிப்பிள்ளை செல்லர் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் கூறினார்.

கடந்த செப்டம்பர் மாதம் 3ந் திகதி நள்ளிரவில் மீசாலையைச் சேர்ந்த மூதாட்டியான முத்தையா பெண் செல்லாச்சியைக் கொலை செய்ததாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதில் மூவரை முன்னரே மாஜிஸ்திரேட் விடுதலைசெய்திருந்தார். நாவலப்பிட்டியைச் சேர்ந்த கிருஷ்ணர் மீது மட்டும் இப்போது வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

## டைனமட் வழக்கில் எதிரி பிணையில் சென்றார்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். டைனமட் வழக்கில் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த எதிரியான தவலிங்கத்தை 1000 ரூபா சரீரப் பிணையில் செல்ல சுப்பிரீம் கோர்ட்டு நீதியரசர் திரு. ஓ. எல். டி. கிறெஸ்டர் உத்தரவிட்டதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். எதிரியை பிணையில் விடுமாறு கோரி சுப்பிரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணை இன்று காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. சொல்வின் மெண்டிஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

இவ்வழக்கில் டைனமைட் வைத்திருந்ததாகவும், அதைப் பாவித்து ஒரு கட்டிடத்தைச் சேதப்படுத்த முயற்சித்ததாகவும் தவலிங்கம் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம் புறக்டர் வி. ஏ. ஈ. பாலசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜராயிருந்தார்.

(கா. நி.)

## 2 ஆடுகள் களவு: நான்கு பெண்கள் கைது

பூநகரி, ஞாயிறு

இரு ஆடுகள் காணமற்போனது சம்பந்தமாக பூநகரி மட்டுவில் நாட்டைச் சேர்ந்த 4 பெண்கள் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

யேசுதாசன் என்பவர் தமது ஆட்டுக் கடாக்கள் இரண்டைக் காணவில்லையெனப் புகார் செய்ததைத் தொடர்ந்து மட்டுவில் நாடு கிராமசேவையாளர் திரு. எஸ். தியாகராசாவும் செட்டி குறிச்சிக் கிராம சேவையாளர் திரு எம். டொமினிக்கும் சந்தேகத்தின் பேரில் பிரஸ்தாப பெண்ணின் வீட்டைச் சோதனையிட்டபோது அங்கு இரு ஆட்டுத் தலைகளும் இறைச்சியும் கால்கள் மற்றும் கொம்புகளும் இருக்கக் காணப்பட்டதாம்.

இப் பொருட்களைச் சுமந்தவாறே பிரஸ்தாப நான்கு பெண்களும் வீதி வழியாகக் காரியாதிகாரியிடம் அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் இவர்கள் யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

## திரைப்படக் கூட்டுத்தாபன மசோதா நிறைவேறியது

கோட்டை, ஞாயிறு

ஆட்சிமன்றத்தில் இன்று திரைப்படக் கூட்டுத்தாபன மசோதா நிறைவேற்றப்பட்டது.

இம்மசோதா சம்பந்தமாக எதிர்க்கட்சிகள் தெரிவித்த கருத்துக்கள் கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்கு முரணானவுள்ளன என்று அமைச்சர் மேலும் பேசும்போது தெரிவித்தார்.

## பிரிட்டினில் புதிய நாணயம்

லண்டன், பெப். 14

பிரிட்டனில் 1200 ஆண்டுகளாக நடைமுறையிலிருந்துவந்த பவுண், சிலின், பென்ஸ் நாணய முறை இன்றுடன் முடிவுக்கு வந்துள்ளது.

ஆயினும் புதிய கரன்ஸியுடன் பழைய நாணயங்களும் குறிப்பிட்ட காலத்திற்கு புழக்கத்திலிருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழையமுறையிலான 100 பென்ஸின் பெறுமதியைவிட புதிய முறையிலுள்ள 100 பென்னியின் பெறுமதி இருமடங்காகவிருக்கும்.

## சமூகக் குறைபாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் குற்றவாளியில்லை என்பதனை தெரியப்படுத்த வாய்ப்பளிக்கப்படும், பொலிஸாருக்குக் கூடிய அதிகாரம் வழங்கக்கூடிய விதத்தில் இந்த திருத்த சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது'

## லட்சம் ரூபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணர்கள் அதிக காலம் இங்கு சேவையாற்றுவதில்லை என்றும் தொடர்ந்து இருப்பவர்களையும் சுகாதார இலாகா ஒரு வருடத்திற்கு மேல் கடமையாற்ற விடுவதில்லை என்றும் பல நோயாளிகள் கவலை தெரிவித்தனர்

வைத்திய நிபுணர் இங்கு இல்லாததால் உதவியாளர்களே இச்சிகிச்சை நிலையத்துக்கு வரும் நோயாளிகளுக்கும் வார்ட்டில் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கும் சிகிச்சை அளிக்கின்றனர்.

லண்டன், பெப். 14

பிரிட்டனில் நடந்துவரும் தபால் ஊழியர் வேலை நிறுத்தம் விரைவில் முடிவுக்கு வரலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த நான்கு வாரகாலமாக இந்த வேலைநிறுத்தம் நடந்து வருகிறது. வேலை நிறுத்தத்தைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.